# செம்மணி

நிலம் 2 துகள் 95 வள்ளுவர் ஆண்டு 2052, 14 - 20 வைகாசி 2022 வாரமலர் பக்கங்கள் 20 விலை ரூபா 50/-

தமிழ் இனப்படுகொலை நிகழ்த்தப்பட்ட இறுதிப்போரின் நினைவாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நெருங்கி வரும் நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் பொது இடங்களில் முள்ளிவாய்க்கால் கஞ்சி ஆக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. முள்ளிவாய்க்காலில் கஞ்சிக்கும் வழியற்ற நிலையில் தமிழர்கள் பட்ட அவலத்தை நினைவுகூரும் வகையில் இந்த முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது.



## 12 மணி நேரம் ஊரடங்கு தளர்வு

ஊரடங்கு உத்தரவு சனிக்கிழமை பகல் 12 மணி நேரத்திற்குத் தளர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. காலை 6 மணிக்கு நீக்கப்படும் ஊரடங்கு உத்தரவு மீண்டும் மாலை 6 மணிக்கு நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

அரச தலைவர் கோத்தாபய ராஜபக்சவை பதவி விலக வலியுறுத்தி கொழும்பு காலி முகத்திடலில் போராட்டம் நடத்தியவர்கள் மீது மகிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து நாடு முழுவதும் பரவி வன்முறைகள் காரணமாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கட்டுக்கடங்காமல் பரவி வந்த இந்த வன்முறைகளால் 8 பேர் உயிரழந்தனர் என்பதுடன் பல நூறு பேர் காயமடைந்

பக்கம் 02

# கைவிட்டன எதிர்க் கட்சிகள் ரணிலோடு சேர்வதற்கு மறுப்பு

## ஓரிரு தினங்களில் புதிய அமைச்சரவை பதவியேற்பு

அரச தலைவர் கோத்தாபய ராஜபக்சவால் இலங்கையின் புதிய தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்ட நிலையில் அவரது ஆட்சியில் பங்கேற்கப்போவதில்லை என்று எதிர்க் கட்சியினர் மற்றும் ஆளும் தரப்பிலிருந்து பிரிந்து சென்று சுயாதீனமாக இயங்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர். இதனால் பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவோடு மட்டுமே ரணில் ஆட்சியமைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கிடையில் புதிய அமைச்சரவை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பதவியேற்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவை புதிய தலைமை அமைச்சராக அரச தலைவர் நியமித்ததை அடுத்து வியாழக்கிழமை உடனடியாகவே கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார் அவர். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டதாக அரச தலைவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பக்கம் 02



## பிள்ளையான் தப்பியோட்டம்

தலைமை அமைச்சர் பதவியில் இருந்து மகிந்த ராஜபக்ச விலகியதை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினரான பிள்ளையான் என அழைக்கப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன் நாட்டைவிட்டுத் தப்பியோடிவிட்டார் என்று செய்திகள் வெளியாகி உள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினரான பிள்ளையான், புலிகளின் தளபதியாக இருந்தவரான கருணாவின் பிரிவுடன் இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். அதன் பின்னர் ராஜபக்சக்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டதன் மூலம் கருணாவிடமிருந்தும் பிரிந்து அரசியல் கட்சி ஒன்றை நடத்தி வந்தார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்ற அவர் கடந்த மாதம் கிரா



மிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராகவும் பதவியேற்றிருந்தார். இந்த நிலையில் மகிந்த ராஜபக்ச பதவி விலகியதைத் தொடர்ந்து பிள்ளையானும் தப்பியோடிவிட்டார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

படகு மூலமாக அவர் மலேசியாவுக்குத் தப்பிச் சென்றிருக்கிறார் என்றும் அங்கிருந்து ஐரோப்பிய நாடொன்றுக்குச் செல்லத் திட்டமிட்டிருக்கின்றென்றும் அந்தச் செய்திகள் கூறுகின்றன.

## மகிந்தவை கைது செய்ய வலியுறுத்தி மனு தாக்கல்

ஆட்சியாளர்களுக்கு எதிராக கொழும்பு காலி முகத்திடலில் நடத்தப்பட்டு வந்த அமைதியான எதிர்ப்புப் போராட்டம் மீது முன்னாள் தலைமை அமைச்சர் மகிந்தவின் ஆதரவாளர்கள் நடத்திய தாக்குதல் தொடர்பில் மகிந்த உள்ளிட்ட 7 பேரைக் கைது செய்யவேண்டும் என்று கோரி கோட்டை நீதிவான் நீதிமன்றில் வெள்ளிக்கிழமை சட்டத்

பக்கம் 02

## தமிழ், முஸ்லிம் கட்சிகளும் ரணில் ஆட்சியில் இல்லை

புதிய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் அமைச்சுப் பதவிகளைப் பெறப்போவதில்லை என்று தமிழ், முஸ்லிம் கட்சிகளும் அறிவித்துள்ளன. முக்கிய எதிர்க் கட்சிகள் ஏற்கனவே தாம் அமைச்சுப் பதவிகளைப் பெறப்போவதில்லை என்று அறிவித்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளும் இதேவிதத்தில் அறிவித்துள்ளன.

ஆட்சியில் பங்கேற்கப்போவதில்லை என்றும் அமைச்சுப் பதவிகளை ஏற்கப்போவதில்லை என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது. அதேநேரம் பொருளாதார நெருக்கடியி

பக்கம் 02

## பொருள் தட்டுப்பாடு குறித்து ஆராய ஐ.தே.கவின் ஐவர் குழு நியமனம்

*பதவியேற்றதும் ரணில் நடவடிக்கை*

பொருளாதார நெருக்கடியால் நாட்டில் ஏற்பட்டுள்ள அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வது தொடர்பில் ஆராய்வதற்கான குழுவை பதவியேற்ற கையோடு நியமித்தார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தக் குழுவில் 5 பேர் இடம்பெற்றுள் ளனர். அவர்களுக்குத் தனித் தனியாகத் துறைகள் ஒதுக்கப்பட் டுள்ளன. உரிய தரப்பினரோடு பேச்சு நடத்தி எடுக்கப்பட வேண் டிய நடவடிக்கைகள் தொடர்பில் தலைமை அமைச்சருக்குப் பரிந்துரைகளை வழங்குவதே இவர்களின் பணி.

உணவுப் பொருட்கள் தட்டுப்பாடின்றிக்

பக்கம் 02

செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**

# சவால்களை வெல்வாரா புதிய தலைமை அமைச்சர்?

புதிய தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு முன்பாக கடும் சவால்கள் காத்திருக்கின்றன. அவற்றைத் தெரிந்துகொண்டேதான் அவர் பதவியைப் பொறுப்பேற்றிருக்கின்றார். எனவே இனிமேல் சாக்குப் போக்குச் சொல்வதற்கு வழியில்லை.

மக்கள் போராட்டங்களை அடுத்து எதிர்பார்க்கப்பட்டதைப்போன்று அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய ஒரு ஆட்சி ரணில் தலைமையில் அமைவதற்கான சாத்தியங்கள் உடனடியாக இல்லை என்பது தெளிவாகிவிட்டது. ஐக்கிய மக்கள் சக்தி, சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி போன்ற எதிர்க் கட்சிகள் ஆட்சியில் பங்கேற்கப்போவதில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டன. ஆளும் தரப்பிலிருந்து பிரிந்து சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல்வீரவன்ஸ, உதன் கம்பன் பில ஆகியோரை உள்ளடக்கிய 10 கட்சிகளும்கூட ரணில் ஆட்சியில் பங்காளியாக இருக்கமாட்டோம் என்று அறிவித்துள்ளது.

இருந்தாலும் பொது ஜன பெரமுன மற்றும் அதனோடிணைந்த சிறு கட்சிகளின் ஆதரவுடன் ரணிலால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே அடுத்த சில மாதங்களுக்கு அவரது ஆட்சி நீடிப்பதற்கான எல்லாச் சாத்தியங்களும் இருக்கின்றன. மேற்குலகு மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகளின் ஆசியும் அவருக்குக் கிடைக்கும்.

ஆட்சியைப் பொறுப்பேற்ற பின்னர் பிபிஸிக்கு வழங்கிய பேட்டியில் இடைக்கால ஆட்சி ஒன்றை ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசமைப்பில் இடமில்லை. தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது ஒரு ஆட்சி என்று ரணில் பதிலளித்துள்ளார். அந்த வகையில் தனது ஆட்சி பற்றி திடமான நம்பிக்கையை அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். தேர்தலில் படுதோல்வியடைந்து தேசியப் பட்டியல் மூலமே நாடாளுமன்றத்திற்குள் நுழைந்திருந்தாலும் இன்று தலைமை அமைச்சர் பதவியைப் பிடித்திருப்பது தனது அரசியல் சாணக்கியத்தனம் என்பதையும் அவர் ஊடகங்களிடம் வெளிப்படுத்தியிருக்கிறார். பிரிட்டனின் முன்னாள் தலைமை அமைச்சர் வின்ஸ்ட்டன் சேர்ச்சிலுடன் தன்னை ஒப்பிட்டு இந்தக் கருத்தை அவர் தெவித்தார்.

எனவே காத்திருக்கும் சவால் என்ன அதை எப்படிக் கையாளவேண்டும் என்பது தெரியாமல் ரணில் விக்கிரமசிங்க காத்து வாக்கில தலைமை அமைச்சர் கதிரையைப் பிடிக்கவில்லை. அதேநேரம் நித்திய கண்டம் பூரண ஆயுசு என்பதைப் போலத்தான் அவரது ஆட்சியின் நாள்கள் நகரும் என்பதையும் அவர் அறியாமல் இருக்கமுடியாது. இந்த நிலையில் அரசமைப்பின் 21ஆவது திருத்தத்தைக் கொண்டுவருவது, பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது, உடனடியாகப் புதிய வரவு செலவுத் திட்டம் ஒன்றை முன்வைத்து நாடாளுமன்றத்தில் அதற்கு அனுமதி பெறுவது, உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாட்டை நீக்குவது, மக்கள் வரிசையில் நிற்கும் கலாசாரத்தை மாற்றுவது உள்ளிட்ட பல வேலைகளையும் அவர் விரைந்து ஆற்றவேண்டியவராக இருக்கின்றார். அதற்கான உதவிகளும் ஆசிகளும் உலக நாடுகள் பலவற்றில் இருந்தும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இவையெல்லாவற்றையும் செவ்வனே ஆற்றி முடிக்கவில்லையாயின் மக்களால் மகிந்த ராஜபக்சவைப் போன்று விரட்டியடிக்கப்படும் நிலையே அவருக்கும் ஏற்படும். நிலமைகள் சீராவதற்கு முன்னர் அது இன்னமும் மோசமாகும் என்று பிபிஸியிடம் தெரிவித்திருந்தார் ரணில். அப்படிப்பட்டதொரு நிலையில் மக்களின் சீற்றம் ரணில் மீதும் திரும்பாதிருக்கும் வகையில் அவரது அரசியல் அனுபவமும் அறிவும் கைகொடுக்கவேண்டும்.

நல்லாட்சி அரசு என்று கூறிக்கொண்டு வந்து மத்திய வங்கி பணமுறி மோசடியோடு தொடர்புபடுத்தப்பட்ட ஆட்சியை அவர் வழங்கினார் என்பதை மக்கள் உடனடியாக மறந்துவடவில்லை. எனவே அவரது ஒவ்வொரு நகர்வுகளும் மிக உன்னிப்பாகக் கவனிக்கப்படும். இதற்கு மத்தியிலேயே அவர் நாட்டை மீட்டெடுக்கவேண்டும். அதற்கு முதலில் மக்களின் நம்பிக்கையை அவர் வென்றெடுக்கவேண்டும்.

## கைவிட்டன...

அரச தலைவரையும் அவரது அண்ணனான தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவையும் பதவி விலக வலியுறுத்தி நாட்டில் பெரும் போராட்டங்கள் இடம்பெற்று வந்தன. இதனையடுத்து மகிந்த பதவி விலகினார். அந்த இடத்திற்கு இடைக்கால ஆட்சி ஒன்றை அமைப்பதற்கான வலியுறுத்தல்களை மதப்பீடங்களும் பொது அமைப்புக்களும் போராட்டக்காரர்களும் வழங்கி வந்தனர். குறிப்பாக அனைத்துக் கட்சி ஆட்சி ஒன்று நிறுவப்பட்டு பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பது எதிர்பார்ப்பாக இருந்தது.

இத்தகைய பின்னணியிலேயே ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சராகப் பதவியேற்றார். எனினும் அவரது ஆட்சிக்கு ஆதரவளிக்கப்போவதில்லை என்று முக்கிய எதிர்க் கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பி. ஆகியன வெள்ளிக்கிழமை அறிவித்தன. ரணிலின் ஆட்சியில் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று சுதந்திரக் கட்சி மற்றும் பொது ஜன பெரமுன கட்சியின் பங்காளிகளான 10 கட்சிகளின் கூட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அறிவித்துள்ளனர்.

இதனால் பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களது ஆதரவுடன் மட்டுமே ஆட்சியமைக்க வேண்டிய நெருக்கடிக்குள் ரணில் விக்கிரமசிங்க தள்ளப்பட்டுள்ளார். இருப்பினும் ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட பல கட்சிகளினதும் நாடாளுமன்ற உறுப்பினர்களை தனது ஆட்சியில் இணைத்துக்கொள்வதற்கான திரைமறைவு பேரம் பேசல்களை ரணில் விக்கிரமசிங்க தொடங்கிவிட்டார் என்று ஜேவிபி குற்றஞ்சாட்டியுள்ளது.

இதற்கிடையில் செவ்வாய்க்கிழமை புதிய அமைச்சரவை அமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன என்று தலைமை அமைச்சர் வட்டாரங்கள் தெரிவித்தன. நாட்டில் அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் அமைச்சரவையை விரைவில் அமைப்பது முக்கியமானது என்று ரணில் கருதுகின்றார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் 17ஆம் திகதி நாடாளுமன்றம் மீண்டும் கூடுவதற்கிடையில் புதிய ஆட்சியின் செயற்பாட்டு முன்னேற்றங்களைக் காட்டிவிடவேண்டும் என்பதில் தலைமை அமைச்சர் குறியாக இருக்கின்றார் என்றும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

எதிர்க்கட்சிகளால் கைவிடப்பட்ட நிலையிலும் ஆளும் பொது ஜன பெரமுன கட்சியினதும் ஏற்கனவே அதனுடன் இணைந்து செயற்படும் உதிரிகளதும் 117 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதன் காரணமாக நாடாளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை ரணில் நிரூபிப்பார் என்றும் உறுதியாக நம்பப்படுகின்றது.

ரணில் பதவியேற்ற கையோடு பல நாடுகளும் உதவிகளை வழங்க முன்வந்திருப்பதும் அவரது ஆட்சி தொடர்வதற்கான சாதகமான சமிக்ஞைகள் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

## தமிழ், முஸ்லிம்...

லிருந்து மீள்வதற்கான நடவடிக்கைகளுக்கு புதிய ஆட்சியாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம் என்றும் கூட்டமைப்பின் பேச்சாளர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இதுவரையில் பயணித்தபடியே அதன் நிலைப்பாடுகளுடன் இணைந்தே தொடர்ந்தும் முஸ்லிம் காங்கிரஸ் பயணிக்கும் என்று கட்சியின் செயலாளர் சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தி புதிய ஆட்சியில் அமைச்சுப் பதவிகளை ஏற்கப்போவதில்லை என்று கூறியுள்ள நிலையில் முஸ்லிம் காங்கிரசும் அதே நிலைப்பாட்டையே பின்தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர், முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், சிறுபான்மைக் கட்சிகள் அனைத்தும் சஜித் பிரேமதாசவுக்கே ஆதரவளிப்பதாகத் தீர்மானித்துள்ளோம் அதனால் புதிய ஆட்சியில் பங்கேற்கும் எண்ணமில்லை என்று தெரிவித்தார்.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈபிடிபி மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன ரணிலின் ஆட்சியில் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்டு இணைவதற்கான சாத்தியங்கள் உள்ளன என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

## பொருள்...

கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பு வஜிர அபேவர்த்தன மற்றும் பாலித ரங்க பண்டார ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது. மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடு பற்றி ஆராயும் பணி ருவான் விஜேவர்த்தனவிடம் கொடுக்கப்பட்டுள்ளது. விவசாய உரங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக அகிரவிராஜ் காரிவாசம் நிமிக்கப்பட்டுள்ளார். எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய சாகல ரட்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

தேவையான பொருட்களின் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு எடுக்கப்படவேண்டிய உடனடிய நடவடிக்கைகள் குறித்து இவர்கள் தலைமை அமைச்சருக்குப் பரிந்துரைகளை வழங்குவார். இதன் மூலம் உத்தியோகப்பற்றற்ற அமைச்சர்களாக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த இந்த நால்வரும் இயங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## 12 மணி...

தனர் என்றும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். வன்முறைகளைக் கட்டுக்குள் கொண்டுவரும் நோக்கத்துடன் இரண்டு தினங்கள் தொடர்ச்சியான ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. அடுத்த இரு நாள்களும் முறையே 6 மற்றும் 7 மணி நேர ஊரடங்குத் தளர்வு வழங்கப் பட்டது.

ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் இருந்த போதும், வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற இடங்கள் தவிர ஏனைய இடங்களில் அது இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. கடைகள் திறந்து வியாபாரம் இடம்பெறவும், மக்கள் வீதிகளில் போக்குவரத்தில் ஈடுபடவும் அனுமதிக்கப்பட்டனர். காவல்துறையினர் மற்றும் படையினர் ஊரடங்கு உத்தரவு மீறப்படுவதைக் கண்டும் காணாமல் இருந்தனர். இந்த நிலையில் சனிக்கிழமை 12 மணி நேர ஊரடங்குத் தளர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

## மகிந்தவை...

தரணி ஒருவர் மனுத் தாக்கல் செய்தார். முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ, காவல் மா அதிபர் சி.டி.விமல ரத்ன ஆகியோரும் அந்த 7 பேரில் அடக்கம். இவர்கள் அனைவரையும் கைது செய்து விசாரணை நடத்துமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினருக்கு நீதிவான் உத்தரவிடவேண்டும் என்று அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

சட்டத்தரணி சேனக பெரேரா இந்த மனுவைத் தாக்கல் செய்தார். 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 136 (1) ( அ) அத்தியாயத்தின் கீழ் தனிப்பட்ட மனுவாக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் சனத் நிசாந்த, நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்ஜீவ எதிரிமான்ன, மொறட்டுவை நகர சபைத் தலைவர் சமன் லால் பெர்னாண்டோ, மேல் மாகாண மூத்த பிரதி காவல் மா அதிபர் தேசபந்து தென்னகோன் ஆகியோர் ஏனைய பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# மகிந்தவின்



**2015இல் தேர்தலில் தோல்வியடைந்து தனது மெதமுல்ல தாய் வீட்டுக்கு உலங்கு வானூர்தியில் சென்றபோது ஊரவர்கள் தமது தலைவர் தோற்றுவிட்ட வேதனையில் கதறி அழுதார்கள்**

**சத்தியநாதன்**

# கொடியிறக்கத் திருவிழா

கிராமத் தலைவரைத் தெரிவு செய்யும்போது ஊரவர்களின் ஒருமித்த தீர்மானத்தின் பிரகாரம், 'அவரைவிட இவர் நல்லவர்' என்று ஒருவரைத் தலைவராகத் தெரிவு செய்வார்கள். சில ஆண்டுகளின் பின்னர் அந்த ஊர் மக்களே "அவன் கள்ளன்" என்ற சிறப்புப் பட்டத்தைத் தாம் தெரிவு செய்த தலைவருக்கு வழங்குவார்கள். கோவில் நிர்வாகத் தலைவர்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், பிரதேச சபைத் தலைவர்கள், மாகாண சபைத் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், தலைமை அமைச்சர், அரச தலைவர் எனத் தாம் தெரிவு செய்த தலைவரையே திட்டித் தீர்க்கின்ற நிலை பல சந்தர்ப்பங்களில் மக்கள் மத்தியில் ஏற்படுவதுண்டு. தாம் எதையெல்லாம் எதிர்பார்த்துக் கிராமத் தலைவர் தொடக்கம் அரச தலைவர் வரை தெரிவு செய்தார்களோ அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றாத தலைவர்கள் மக்களால் நிராகரிக்கப்படுகின்றனர்.

**மகிந்தவின் நிராகரிப்பு**

1970ஆம் ஆண்டில் நாடாளுமன்றுக்குத் தெரிவாகிச் சென்ற மகிந்த ராஜபக்ச இப்போது (2022, மே) பதவி துறக்கும் வரை அரசியலில் இருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், தலைமை அமைச்சர், அரச தலைவர் என நாடாளுமன்ற நடைமுறையிலுள்ள அனைத்துப் பதவிகளையும் வகித்தார். இந்தப் பதவிகளில் அவரை இருக்க வைத்தவர்கள் மக்களே. அதுவும் சிங்கள மக்கள்.

ஒரு கட்சியை, ஒரு தலைவரை மக்கள் விரும்புவது தவறல்ல. வாக்குரிமையுள்ள ஒவ்வொரு குடிமகனும் தனக்கான அரசியலைத் தீர்மானிப்பது ஜனநாயகத்தின் பண்பாகும். இவ்வாறு மக்கள் ஒரு கட்சியின் கொள்கையில் அல்லது ஒரு தலைவரின் கொள்கையில் நம்பிக்கை வைத்து வாக்களித்து அவரை நாடாளுமன்றம் அனுப்பிய பின்னர் அந்தத் தலைவர் அந்தக் கட்சியை விட்டு வெளியேறி வேறொரு கட்சியில் இணைவது என்பது வாக்களித்த மக்களை ஏமாற்றும் செயல்.

அதேவேளை மக்களை ஈர்த்த கொள்கைக்கு மாறாக நடப்பதும் மக்களை ஏமாற்றுவதாகவே அமையும். இந்த ஏமாற்றமடையும் மக்களைப்போலவே தாம் விரும்பும் தலைவருக்காக உயிரைக் கொடுக்குமளவுக்கு விசுவாசமுள்ள தொண்டர்கள் தலைவர்களுக்கு இருப்பதும் வழமை.

மகிந்தவுக்கும் இவ்விரு சாராரும் இருக்கிறார்கள். ஏமாற்றமடைந்த மக்கள் போராட்டத்தில் ஈடுபட்ட அதேநேரம் மகிந்த பதவியிறங்கிய நாளில் அலரி மாளிகையில் கூடியிருந்த தொண்டர்கள் மகிந்தவின் பதவி விலகலால் விரக்தியடைந்து அலரி மாளிகைக்கு வெளியே வந்து போராட்டக்காரர்களுடன் வன்முறையில் ஈடுபட்டனர். இந்தத் தொண்டர்களில் பலர் வயதானவர்கள். அதில் பலர் போதையில் இருந்தார்கள். போதாக்குறைக்கு வாகனங்களில் மதுப்போத்தல்களையும் எடுத்துச் சென்றிருந்தனர்.

**மகிந்தவை மலையாக நம்பினர்**

2005 இல் அரச தலைவராகப் பதவியேற்று 30 வருட காலமாக நீடித்துவந்த போரைப் 4 வருடங்களில் முடிவுக்குக் கொண்டுவந்ததால் சிங்கள இனத்தின் காவலனாக மகிந்த ராஜபக்ச மதிக்கப்பட்டார். 2015இல் தேர்தலில் தோல்வியடைந்து தனது மெதமுல்ல தாய் வீட்டுக்கு உலங்கு வானூர்தியில் சென்றபோது ஊரவர்கள் தமது தலைவர் தோற்றுவிட்ட வேதனையில் கதறி அழுதார்கள். 2019இல் அரச தலைவராகக் கோட்டாபய ராஜபக்ச தெரிவு செய்யப்பட்டமை ராஜபக்ச குடும்பம் மீது நம்பிக்கையை ஏற்படுத்தியது. அதே ஊரவர்கள் இன்று மகிந்த குடும்பத்தையே எதிர்க்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

பிரதேச சபை உறுப்பினர் ஒருவருக்குப் பிரச்சினை ஏற்பட்டால் கூட உடனடியாக அவரைத் தொடர்புகொண்டு அந்தப் பிரச்சினையைத்தானே பொறுப்பேற்றுக் கொள்ளும் மகிந்த அந்த உறுப்பினரை அமைதியாக இருக்கும்படி கூறுவாராம். இது மகிந்தவின் தலைமைத்துவத்தில் சிறப்பான ஒரு விடயம் என்று பலரும் சொல்வார்கள். அத்தகைய மகிந்த தான் பதவியிலிருந்து இறங்கும்போது தனது ஆதரவாளர்களைப் பிழையான வழியில் தூண்டிவிட்டார். அதன் விளைவுகள் அவர் எதிர்பாராததாக இருந்தது. ராஜபக்ச குடும்பத்தின் சொத்துகள், அவரது தந்தை டி.எச்.ராஜபக்சவின் நினைவுச் சின்னம், பொது ஜன பெரமுன கட்சியைச் சார்ந்த அரசியல்வாதிகளின் வீடுகள், அவர்களின் வர்த்தக மையங்கள், நாடாளுமன்ற, பிரதேச சபை உறுப்பினர்கள் இறக்க நேரிட்டமை எனப் பல எதிர்வினைகள் ஏற்பட்டது.

தான் தூண்டிவிட்ட ஆதரவாளர்களைப் போராட்டக்காரர்கள் ஓட ஓட அடித்ததையும், குப்பைத் தொட்டிக்குள் தூக்கி வீசியதையும், பேர வாவிக்குள் தத்தளிக்க விட்டதையும், உள்ளாடை இல்லாமலும் உள்ளாடையுடனும் போதையில் தடுமாறியதையும், வாகனங்களை அடித்து நொருக்கிக் கொளுத்தியதையும் மகிந்த தொலைக்காட்சியிலோ சமூக ஊடகங்களிலோ பார்த்து வேதனைப்பட்டிருக்க வாய்ப்புண்டு.

தனது குடும்ப அரசியல், கட்சி அரசியல் என எல்லாவற்றையும் அழித்துச் செல்வது என்பது மக்களையும் நாட்டையும் ஜனநாயகப் பண்புகளையும் மதிக்கும் - நேசிக்கும் தலைவருக்குரிய குணாம்சங்கள் அல்ல. ஆகவே மகிந்த ஒரு சிறந்த மக்கள் தலைவர் அல்ல என்பதையே இது கோடிட்டுக் காட்டியிருக்கிறது. இது சிங்களவரைச் சிங்களவர்கள் தாக்கிய ஒரு சம்பவமாக இருந்தபோதிலும் 1983ஆம் ஆண்டு தமிழருக்கு எதிராகக் கலவரம் எனும் பெயரில் சிங்களவர்களால் மேற்கொள்ளப்பட்ட வன்முறையை ஒத்த வீரித்துடனேயே இருந்தது. சிங்களவரின் காடைத் தனத்தையும் இன்னும் அவர்கள் திருந்தவில்லை என்பதையுமே வெளிக்காட்டியிருக்கிறது.



# மகிந்த வீட்டுக் காவலில்! கோத்தாபயவின் புது வியூகமா?

நியூட்டன்

படைத்தரப்பில் உள்ளவர்களுக்கு அரசியல்வாதிகளைப் பிடிப்பதில்லை என்பது இலங்கையின் பொதுவான யதார்த்தம். இது சகோதரர்கள் விடயத்தில் கோத்தாபாயவுக்கும் பொருந்தும்.

ராஜபக்சாக்களின் தந்தையான டி.ஏ.ராஜபக்ச ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகித்தவர். 1956இல் எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்கா அந்தக் கட்சியிலிருந்து பிரிந்து சிறீலங்கா சுதந்திரக் கட்சியை தொடங்கப்போவதாகக் கூறிவிட்டு வெளியேறியபோது நிழல்போல இன்னொருவர் தனக்குப் பின்னால் வருவதை உணர்ந்து திரும்பிப் பார்த்தார் என்றும் தனக்குப் பின்னால் டி.ஏ.ராஜபக்ச நடந்து வருவதைக் கண்டார் என்றும் கூறப்படுகின்றது. அந்தளவுக்கு சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தொடக்க கர்த்தாக்களில் ஒருவர் டி.ஏ.ராஜபக்ச.

தந்தையின் அடித்தளத்தை வைத்து 1970ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ச மிக இளம் வயதில் நாடாளுமன்ற உறுப்பினரானார். அவர் அரசியலில் ஈடுபட்டிருக்க, சகோதரர்களில் ஒருவரான கோத்தாபய ராஜபக்ச படைத்தரப்பில் பணியாற்றினார். சமல் ராஜபக்ச காவல்துறையில் கடமையாற்றினார். மகிந்த மட்டும் அரசியலில் இருந்த நிலையில் 2005ஆம் ஆண்டு அவர் அரச தலைவரானார். பின்னர் அவரது ஏனைய சகோதரர்களும் அரசியலில் குதித்தனர். அது ராஜபக்ச குடும்ப அரசியலாக உருவெடுத்தது.

**கோத்தாவின் வழி தனி வழி**

ராஜபக்ச குடும்பத்தில் ஏனையவர்களைப்போல அரசியலில் ஈடுபடாதவர் கோத்தாபய. படைத்தரப்பில் பணியாற்றிய அவர் மச்சம், மாமிசம் உண்ணும் பழக்கமில்லாதவர். மது அருந்துவதும் இல்லை. இதனால் கோத்தாபாயவின் போக்கு அவரது சகோதரர்களைவிட வேறுபட்டதாக இருந்தது. இந்த வேறுபாடும் முரண்பாடும் அவரது அரசியலிலும் காணப்பட்டது. குடும்பத்தவரின் ஆலோசனைகளைக் கேட்பதில்லை என்பதற்கு அப்பால் சகோதரர்களின் சொத்துக் குவிக்கும் நடவடிக்கைகளுக்கும் அவர் ஒத்துழைப்பவராக இல்லை என்றும் நம்பப்படுகின்றது.

பொது ஜன பெரமுன ராஜபக்ச குடும்பத்தின் கட்சி. அந்தக் கட்சியினர் எங்கும் சிவப்புச் சால்வை அணிந்து ஊர்ந்து திரியக் கோத்தாபய அதிலிருந்து வேறுபட்டார். இது கட்சிக்குள் ஒரு மையத் திசை நோக்கிய கவர்ச்சியை இல்லாது செய்தது. மகிந்த ஒருவகை அரசியலையும் நாமல் இன்னொரு வகை அரசியலையும் பசில், சமல் ஆகியோர் தனித்தனியாகவும் செயற்பட்டதால் கோத்தாபயவின் அரச நிர்வாகத்துக்கான ஒத்துழைப்பு இல்லாது போயிற்று. அதேநேரம் கோத்தாபயவை அரச தலைவராக்கியதில் அவரது குடும்பத்தினருக்கு அதிக பங்கிருந்தது என்ற காரணத்துக்காக அவர்களின் வில்லத்தனங்களைச் சகித்துக்கொள்ளவேண்டிய நெருக்கடி நிலை கோத்தாபயவுக்கு இருந்தது. ஆனாலும் கோத்தாபயவின் வழி தனி வழியாகவே இருந்தது.

**கோத்தா கோ ஹோம்**

கோத்தாபயவை வீட்டுக்குப் போகுமாறு கோஷமிட்டு மக்கள் வீதியில் இறங்கிப் போராடத் தொடங்கியதும் பசில், நாமல், சமல், சசீந்திர ராஜபக்ச என அனைவரும் தாம் வகித்த அமைச்சுப் பதவிகளைத் தாங்களே கைவிட்டு ஓடவேண்டிய நிலை ஏற்பட்டது. அதைத் தடுப்பதற்குக் கோத்தாபய எந்தப் பிரயத்தனமும் எடுக்கவில்லை. தான் விரும்பியதைக் குடும்பப் பகையின்றி மக்கள் நிறைவேற்றியது கோத்தாபயவைப் பொறுத்தவரை திருப்தியே. அடுத்த கட்டத்தில் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச பதவியைத் துறப்பது நல்லது எனப் பலரும் ஆலோசனைகள் கூறினர். ஆனாலும் மகிந்த அதைச் செய்யாது அடம்பிடித்தார்.

மகிந்தவை ஓரம்கட்டுவதற்காக அமைச்சர்களையும் பொது ஜன பெரமுன உறுப்பினர்களையும் அழைத்துக் கூட்டம் ஒன்றை வைத்த கோத்தாபய தற்போதுள்ள நிலையில் தான் பதவி விலகுவதே உசிதமானது என அறிவித்தபோது கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் அவரது ஆதரவாளர்கள் சிலர் அதை நிராகரித்ததுடன் தாங்கள் பதவிகளைத் துறந்து தந்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காண்பது என்று தீர்மானித்தனர். அதன்படி தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவும் அமைச்சரவையும் பதவி துறப்பது என்று முடிவெடுக்கப்பட்டது.

இந்த முடிவுக்குப் பின்னர் கருத்து வெளியிட்ட மகிந்த ராஜபக்ச தான் தலைமை அமைச்சர் பதவியிலிருந்து விலகிய பின் நாடாளுமன்றில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து எதிர்க்கட்சித் தலைவராக மாறவிருக்கிறேன் என்று அறிவித்தார். இது அரச தலைவர் கோத்தாபயவை நேரடியாக எதிர்க்கத் துணிந்த கட்டமாக அமைந்தது.

**தான் யாரென்பதைக் காட்ட முனைந்த மகிந்த**

பதவி விலகுவது என்ற முடிவுக்கு வந்தபின் தனது கட்சியில் தனக்கு விசுவாசமாக இருந்த பலரை அலரி மாளிகைக்கு அழைத்துத் தான் பதவி விலகப்பேகும் முடிவை அறிவித்ததுடன் தான் பதவி விலகிய பின்னர் நாடு எவ்வாறு அல்லோல கல்லோலப்படும் என்றும் தான் தலைமை அமைச்சராக இருந்தால் அந்த நிலை ஏற்பட்டிருக்காது என்று அரச தலைவருக்கும் ஏனையவருக்கும் உணர்த்த விரும்பினார் மகிந்த. இதன் பின்னரே மகிந்த அணியினர் மைனா கோ கம, கோத்தா கோ ஹோம் போராட்டக்காரர்கள் மீது தாக்குதலை நடத்தினர். இதன் பின்னர் நாடு முழுதும் அடிதடிகளும், கொலைகளும், தீ வைப்புகளும் என வன்முறை பரவியதுடன் 100 வருடங்களுக்கு மேல் பழமையான ராஜபக்சாக்களின் தாய்வீடு மெதமுல்லையில் தீக்கிரையானது. தந்தை டி.ஏ.ராஜபக்சவின் உருவச்சிலை வீழ்த்தப்பட மண்டபம் எரிக்கப்பட்டது.

விவசாய அமைச்சராக இருந்து விவசாயிகளை இயற்கைப் பசளையில் விவசாயம் செய்யுமாறு கூறிய சமலின் வீட்டில் 300 யூறியா உரப்பைகளும் டீசலும் மக்களால் சூறையாடப்பட்டது. ஜோன்சன் பெனாண்டோவின் வீட்டில் (குருநாகல்) நூற்றுக்கணக்கில் இருந்த எரிவாயுச் சிலிண்டர்கள், பதுக்கப்பட்டிருந்த பொருள்கள் என எல்லாம் மக்களால் வெளிக்கொணரப்பட்ட பின்னர் மகிந்த குடும்பமும் அவருக்கு நெருங்கியவர்களும் மக்கள் மத்தியில் தலைகாட்ட முடியாது ஓடி ஒளிக்கும் நிலை ஏற்பட்டது.

மகிந்த வேறு நாடொன்றுக்குத் தப்பிச் செல்ல முடியாதவாறு திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டதுபோல பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். அவர் அங்குதான் இருக்கிறார் என்று பாதுகாப்புச் செயலர் தெரிவித்திருக்கிறார். இனிவரும் 3 மாதங்களுக்குத் தொடர்ச்சியாக நாடாளுமன்றில் சமூகமளிக்க முடியாத நிலை ஏற்படும் பட்சத்தில் மகிந்தவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் இல்லாது போய்விடும்.

1986 காலப்பகுதியில் அமெரிக்கா சென்று 2005இல் மகிந்த அரச தலைவராக ஆக்கியபோதே நாட்டுக்கு வந்த கோத்தாபயவுக்கு ஏனைய சகோதரர்களைப்போல சொத்துகள் இருப்பதாகத் தெரியவில்லை. இது கோத்தாபய தனது நிலையில் பிடியாக இருப்பதற்கு ஒரு காரணம் எனலாம். தனது கைகள் கறைபடியாதவை என்று அவர் திரும்பத் திரும்பச் சொல்லி வருகின்றார்.

**ஏன் படைத்தரப்பை இறக்கித் தடுக்கவில்லை?**

கோத்தாபய படைத்தரப்பை இறக்கி இந்த அழிவுகளை ஏன் தடுக்கவில்லை? என்று கேள்வி எழுப்பினார் ஐக்கிய மக்கள் கட்சியைச் சேர்ந்த லக்ஸ்மன் கிரியல்ல. அதேவேளை முன்னாள் அரச தலைவர் சந்திரிகா படைத்துறை ஆட்சியை ஏற்படுத்துவதற்கான எத்தனம்தான் காலிமுகத் திடல் போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல் என்றிருந்தார். இத்தகைய சூழலில் படையினர் மக்கள் மீது வன்முறைகளை நிகழ்த்தியிருந்தால் அதை வைத்தே ஆட்சியைக் கவிழ்க்கும் நிலை ஏற்பட்டிருக்கும்.

மக்களால் அழிக்கப்பட்ட அரசியல்வாதிகளின் சொத்துகள் மக்களிடம் திருடப்பட்டவை என்ற அபிப்பிராயம் கோத்தாபயவுக்கு இருந்திருக்க வாய்ப்புண்டு. தனது சகோதரர்களின் வில்லத்தனத்தைத் தானே முடிவுக்குக் கொண்டு வந்திருக்கிறார் கோத்தாபய. இதன் மூலம் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும் தனது குடும்பத்தவர்கள் எவரும் மீண்டும் ஆட்சிக்குள் தலையிடாதவாறு தடுத்துமிருக்கிறார். இந்தப் பின்னணியில் வைத்துப் பார்க்கும்போது மகிந்த ராஜபக்சவைக் கோத்தாபய ராஜபக்ச வீட்டுக்காவலில் வைத்திருப்பதாகவே கொள்ள முடிகிறது.

# ஒட்டகப்புலத்தில் காணி மோசடி!

ஒட்டகப்புலத்தில் வெளியூர் மக்களுக்கு பெருமளவில் காணிகள் இருந்ததாக வரலாறு இல்லை, அப்படி இருந்திருந்தால் 1990ஆம் ஆண்டு வரை அவர்கள் தமது காணிகளுக்கு உரிமை கோராது இருந்திருக்கப் போவதுமில்லை. ஆனால், இப்போது தனது பேரன், பூட்டன் என்று கதை சொல்லிக்கொண்டு மோசடிக்காரர்கள் காணிகளை அபகரிக்கிறார்கள்.



## புலம்பெயர்ந்தவர்களின் காணிகள் கள்ள உறுதிகள் மூலம் விற்பனை

உள்நாட்டுப் போரின் போது வலி. வடக்கு ஒட்டகப்புலம் மக்கள் 1990ஆம் ஆண்டு உள்நாட்டுக்குள்ளும், வெளிநாடுகளுக்கும் இடம் பெயர்ந்து சென்றனர். படையினர் தாம் கைப்பற்றிய இடங்களை உயர்பாதுகாப்பு வலயமாக அறிவித்து 20 வருடங்களுக்கும் மேலாகக் கையகப்படுத்தி வைத்திருந்தனர். மக்களின் குடியிருப்புப் பகுதிகளில் முகாம்களை அமைத்து இன்றுவரை சில இடங்களில் நிலை கொண்டுள்ளனர்.

2009ஆம் ஆண்டு போர் முடிந்தது. அதன் பின்னரும் பல வருடங்களாக இந்தப் பகுதிகள் படையினரின் கட்டுப்பாட்டின் கீழேயே இருந்தன. தமிழ் அரசியல் கட்சிகளும் மக்களும் இந்த நிலங்களை விடுவிப்பதற்காகப் பல்வேறு போராட்டங்களை நடத்தினர். அதன் விளைவாக, 2017/2018ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் படிப்படியாக உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து பல காணிகள் விடுவிக்கப்பட்டன. விடுவிக்கப்பட்ட காணிகளில் சில குடும்பங்கள் வீடுகளைக்கட்டி மீளக்குடியரத் தொடங்கியுள்ளனர். சிலர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இன்னும் சிலர் தமது காணிகளை முட்கம்பி வேலிகள் போட்டு எல்லையிட்டுப் பாதுகாத்து வைத்துள்ளனர்.

பலர் இன்னும் தமது காணிகளை துப்புரவு செய்து விவசாய நடவடிக்கைகளை தொடங்கவில்லை. அவர்களின் குடியிருப்புப் பகுதிகள் இன்னமும் பாதுகாப்புப் படையினரால் விடுவிக்கப்படாத காரணத்தால் அவர்களால் மீளக்குடியமர்ந்து தமது விவசாயக் காணிகளில் தொழில் செய்ய முடியவில்லை. மற்றொரு பகுதிக் காணிகள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் மக்களுக்குச் சொந்தமானவையாக இருக்கின்றன.

இந்தப் பகுதியில் உயர் பாதுகாப்பு இருந்த காரணத்தாலும் கண்ணிவெடிகள் உள்ளிட்ட ஆபத்துக்கள் குறித்த அச்சம், அடிப்படை வசதிகள் இன்மை, உட்கட்டமான வசதிகளின் போதாமைகள், 20 வருடங்களில் வேறொரு இடத்தில் காலூன்றிய நிலையில் உடனடியாகத் சொந்த இடத்திற்குத் திரும்பிவிடமுடியாத சிக்கல் என்று பல்வேறு காரணங்களால் இந்தப் பகுதிகளில் மீள்குடியமர்வு தாமதமாகி வந்த நிலையில் 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களை அடுத்தும், கொவிட்-19 பெரும் தொற்றுக் காரணமாகவும் மீள்குடியமர்வு இன்னும் மந்தப்பட்டுள்ளது.

இத்தகை நிலையிலேயே ஒட்டகப்புலத்தைச் சோந்த காணிகள் சிலரால் அபகரிக்கப்பட்டு போலி காணி உறுதிகள் முடிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன என்கிற அதிர்ச்சிகரமான செய்திகள் வெளிவருகின்றன. 2021/2022 இல் ஒட்டகப்புல மக்கள் தாம் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்த காணிகளை துப்பரவு செய்து அவற்றை அறிக்கையிட முற்படும்போது சில நபர்கள் அரசியல், காவல்துறை மற்றும் அடியாட்களின் பின்புலத்துடன் மக்களை அச்சுறுத்தி அவர்களை விரட்டியடிப்பதுடன் அந்தக் காணிகள் தமக்குச் சொந்தமானவை என்றும் அட்டகாசம் செய்கின்றனர்.

அந்தக் காணிகள் தங்களுக்குச் சொந்தமானவை என்று ஆதாரப்படுத்தப் போலியான காணி உறுதிகளையும் அவர்கள் வைத்துள்ளனர். இப்படி அபகரிக்கப்படும் காணிகளுக்கு உரிமை கோருபவர்கள் அனேகமாக ஒட்டகப்புலத்தைச் சேர்ந்தவர்களாக இல்லை. எல்லோருமே வெளி இடத்தவர்கள். ஒட்டகப்புலத்துக் காணிகள் காலம் காலமாக, வரலாற்று ரீதியாக, பாரம்பரியமாக கிராமத்து மக்களுக்கு உரித்தானவை. ஒட்டகப்புல மக்களிடம் இதற்கான காணி உறுதிகளின் மூலப் பிரதிகள் உள்ளன. ஆனால் போர் காரணமாக தோம்புகள் யாழ்ப்பாணம் மாவட்ட அரச பதிவாளர் அலுவலகத்தில் இல்லை. இடப்பெயர்வின் போது அவற்றில் பல அழிக்கப்பட்டுவிட்டன. இழக்கப்பட்டுவிட்டன. உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த காலத்தில் படையினரால் காணிகளின் எல்லைகளும் அழிக்கப்பட்டுவிட்டன. இவற்றைத் தமக்குச் சாதமாக்கிக்கொண்டு சில மோசடியாகக் காணிகளுக்கு உரிமைகோருவதுடன் அவற்றை விற்பனை செய்யவும் முனைகின்றனர்.

ஒட்டகப்புலத்தில் வெளியூர் மக்களுக்கு பெருமளவில் காணிகள் இருந்ததாக வரலாறு இல்லை, அப்படி இருந்திருந்தால் 1990ஆம் ஆண்டு வரை அவர்கள் தமது காணிகளுக்கு உரிமை கோராது இருந்திருக்கப்போவதுமில்லை. ஆனால், இப்போது தனது பேரன், பூட்டன் என்று கதை சொல்லிக்கொண்டு மோசடிக்காரர்கள் காணிகளை அபகரிக்கிறார்கள். அரசியல் சூழ்நிலையை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு ஒரு குழு அதிவேகமாக காணி அபகரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது.

காணி அபகரிப்பில் ஈடுபடும் இந்த குழு வலுக்கட்டாயமாக காணிக எல்லைகளைப் போடுகின்றது. பினனர் வேறு ஒரு காணியின் 19ஆம் நூற்றாண்டின் தொடக்ககால (1900s) உறுதியை வைத்துக்கொண்டு தமக்கிருக்கும் மாவட்டச் செயலக மட்டத் தொடர்பு, அரசியல் தொடர்பு, சட்டத்தரணி தொடர்பு, நில அளவையாளர் தொடர்புகளைக்கொண்டு மாதங்களுக்குள் காணியை வேறு யாருக்கேனும் விற்றுவிடுகிறார்கள்.

ஒட்டகப்புலத்திலிருந்து இடம்பெயர்ந்து தற்போது வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர் மக்களில் பலருக்கும் இப்போது தமது காணிகளும் பறிபோய்விடுமோ என்கிற அச்சம் ஏற்பட்டிருக்கின்றது. அதனால் புலம்பெயர் மக்களுக்கு சொந்தமான காணிகள் அபகரிக்கப்படுவதை அரச இயந்திரம் தடுத்து நிறுத்தவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அண்மையில் புலம்பெயர் தமிழர்களை இலங்கையில் முதலிட வருமாறு அரச தலைவர் கோத்தாப ராஜபக்ச அழைப்பு விடுத்திருந்தார். இருக்கும் சொத்துக்களுக்கே பாதுகாப்பில்லை என்கிறபோது இலங்கையில் முதலிடுவதற்கு எந்த புலம்பெயர் தமிழன் தயாராவான்? எனவே காணிகள் மோச டிக் கும்பலால் அபகரிக்கப்படுவதைத் தடுத்த நிறுத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.


காணிகள் அபகரிக்கப்படுவது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன என்பதை தெல்லிப்பழை பிரதேச செயலகம் பகிரங்க அறிவித்தலாகவே வெளியிட்டிருந்தது. செயலகத்தின் முகநூல் பக்கத்தில் "பொது மக்களுக்கு தயவான வேண்டுகோள்" என்ற தலைப்பில் ஒரு மக்கள் விழிப்புணர்வுச் செய்தியும் இது தொடர்பில் வெளியிட்டிருந்தது. உள்ளூர் பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது.

அந்த அறிவிப்புக்களில், சில கொள்ளைக் கும்பல்கள் முறையற்ற மோசடிகளை மிகவும் நூதனமான முறையில் மேற்கொண்டு மக்களது காணிகளை தமது பெயருக்கு கையப்படுத்தி

# சிறைக்குள்...

56

தர்மராசா



## மட்டு சிறையில் சாப்பாட்டின் தரம்

மாட்டிறைச்சியைப் பொறுத்தவரை மட்டக்களப்புச் சிறையில் முதற் தரமான இறைச்சி தருவார்கள். அங்குள்ள மாடுகளுக்கு நல்ல புல் மேய்ச்சல் கிடைப்பதால் அந்த இறைச்சி கொழுப்பாக இருக்கும். அந்த இறைச்சி சுவையாக இருக்கும். மட்டக்களப்புச் சிறையில் சமையலுக்கு அநேகமாக மகாலிங்கம் ஐயாவே பொறுப்பாக இருந்தார். அவர் ஓய்வுபெறும் காலத்தை நெருங்கிக் கொண்டிருந்தார். அவர் ஓய்வு பெற்ற பின்னர் திருகோணமாலையில் வசித்துப் பின் இறந்தார் என்றும் அறிந்தேன்.

சிறைச்சாலை உணவு ஒப்பந்தகாரர் கொஞ்சம் பழுதான மீனைக் கொண்டுவந்தால்கூட அதைத்திருப்பி அனுப்பிவிட்டு நெத்தலி அல்லது முட்டை வாங்கித் தரும்படி கேட்டு வாங்கிச் சமைத்துத் தருவார். கைதிகளின் உணவு விடயத்தில் அநியாயம் செய்யக்கூடாது என்று எல்லாச் சிறைச்சாலை ஊழியர்களும் நினைப்பதில்லை. ஆனால் கைதிகளும் மனிதர்கள் தான் என்று சிந்தித்தார் மகாலிங்கம் ஐயா.

மட்டக்களப்புச் சமையல் பகுதி மிகச் சிறியது. 12 நீளமும் 7அடி அகலமும் ஆன ஓட்டால் வேயப்பட்ட சிறிய இடமே இதற்குப் பயன்படுத்தப்பட்டது. இந்தச் சிறிய கட்டடம் முன்பு சலவைத்தொழிலுக்குப் பயன்பட்டது என்று அறிந்தேன். மழைநாள்களில் அந்தக் குசினி முழுதும் ஒழுகித் தண்ணீர் நிற்கும். மனித உரிமை அமைப்புகள், பொது அமைப்புகள் சிறைக்கு வந்திருந்தாலும் இதைக் கண்டுகொள்வதில்லை. தலைமை சிறை அதிகாரியின் அறை குளிரூட்டப்பட்டிருப்பதால் சிறைக்கு வருகின்ற அதிகாரிகளுக்குத் தூசியோ, புகையோ, அழுக்கோ பட்டுவிடாதபடி அவரது அறைக்குள் வைத்துக் கதைத்துத் திருப்பி அனுப்பிவிடுவர்.

அனுராதபுரச் சிறையில் சிலவேளைகளில் கோழி இறைச்சி சமைத்துத் தருவார்கள். கறிக்குள் கோழியின் செட்டைகள் ஆங்காங்கு காணப்படும். அதை வைத்துக் கோழி என்ன நிறம் என்பதைக் கண்டுபிடிப்பர். அதற்குள் வரும் சிறிய இறைச்சித் துண்டுகள் கோழியின் எந்தப் பாகத்துக்கு உரியது என்பதைக் கண்டுபிடிப்பதற்கு மிருகங்களின் எலும்புகளைக் கொண்டு மிருகங்களை வடிவமைக்கும் நிபுணர்களை வைத்துத்தான் அறியவேண்டியிருக்கும்.

அப்படியிருந்தும் ஒரு கைதி தனக்குக் கிடைத்த கோழி இறைச்சித் துண்டு கோழியின் கழிவகற்றும் உறுப்பு என்று கண்டுபிடித்துவிட்டான். அதன்பின் அதை அவர் சாப்பிடவில்லை.

இறைச்சித் துண்டை எடுத்துப் பின்னர் சமையல் பாட்டிக்காரரிடம் களவாகக் கொஞ்ச இறைச்சி வாங்கி மீண்டும் சமைத்து நல்ல சுவையான கறியாக்குவார்கள் கைதிகள். சிலவேளை பாட்டிக்காரனுக்கு 50 அல்லது 100 ரூபா கொடுத்து வைத்தால் தரமான இறைச்சிக்கறியைக் கொண்டு வந்து தருவார்கள். இவையெல்லாம் மிகச் சாதாரணமாக நடக்கின்ற சம்பவங்கள்.

4.4.2002 அன்று களுத்துறை பி பிரிவுக்கு பகல் உணவுக்கான மீன் கறி கொண்டுவரப்பட்டது. அதில் மிளகாய்த்தூள் அறவே போடப்படவில்லை. கைதிகள் முரண்பட்டார்கள். கறி வேண்டாம் வெளியே கொண்டுபோகுமாறு கூறினார்கள். பத்து நிமிடம் கழித்து மீண்டும் அதே கறியைக் கொண்டு வந்தார்கள். அப்போது மிளகாய்த்தூளைக் கரைத்து மீன் துண்டுகளுக்கு மேல் தெளித்துக் கொண்டுவந்தார்கள்.

அன்று சமையலுக்குப் பொறுப்பாக இருந்த சிறைச்சாலை ஊழியர் வழமையாகப் பொருள்களைக் களவெடுத்துப் பாட்டிக்காரன் ஊடாக விற்றுப் பணம் பெறும் பழக்கமுள்ளவர். அதனால்தான் அன்று மிளகாய்த்தூளை யாருக்கோ விற்றுப் பணம் வாங்கிவிட்டான் என்று நீண்ட காலக் கைதி ஒருவர் கூறினார். சிறைச்சாலையில் தரப்படுகின்ற உணவைவிட அங்கு கைதிகளால் களவாகச் சமைக்கப்படுகின்ற உணவு தரமானதாக இருக்கும். அதற்குப் பல்வேறு விதமான பொருள்களைப் போட்டுச் சுவையூட்டுவார்கள்.

சிறையில் காலையில் வழங்கப்படுகின்ற சம்பலைப் பிழிந்தெடுத்தால் உறைப்புடன்கூடிய பால் எடுக்கலாம். சிறையில் தருகின்ற குழம்பைக் கொஞ்ச நேரம் ஓரிடத்தில் வைத்தால் கீழே தண்ணீரும் மேலே குழம்பும் இருக்கும். குலுக்காமல் வடித்தெடுப்பார்கள். இவ்வாறு அங்கு கிடைக்கின்ற பொருள்களைக் கொண்டும் மற்றும் விசிற்றின்போது எடுக்கின்ற பொருள்களையும்போட்டுச் பின்னர் கைதிகள் தனியாகச் சமைப்பார்கள் விசிட்வரும்போது உறவினர்கள் மிக்சர் பகோடா ஆகியவற்றை வாங்கி வந்தால் அவற்றுக்குள் மிளகாய்த்தூள் அதிகம் போட்டுடுத் தயாரித்து வருமாறு வீட்டாரிடம் சொல்லி அவற்றை எடுத்துத் தூளுக்குப் பதிலாகக் கைதிகள் பயன்படுத்துவார்கள். அந்தப் பகோடாக்கள் வெறுமனே உண்ண முடியாதளவுக்கு உறைப்பாக இருக்கும். ஏனெனில் அதிலுள்ள தூள்தான் கைதிகளுக்கு முக்கியம்.

(தொடரும்)

---

## ஒட்டகப்புலத்தில்...

யுள்ளதாகத் தமக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இந்த காணி அபகரிப்பைத் தடுத்து நிறுத்த மக்களின் ஒத்துழைப் புத் தேவை என்றும் கோரப்பட்டிருந்தது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனும் அண்மையில் ஒட்டகப்புலம் பகுதிக்குச் சென்று காணி அபகரிப்பால் பாதிக்கப்பட்ட மக்கள், அங்கு மீள்குடியமர்ந்துள்ள மக்கள், பங்குத்தந்தை ஆகியோருடன் கலந்துரையாடியிருந்தார். அபகரிக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட காணிகளையும் நேரில் சென்று பார்வையிட்டிருந்தார்.

பார்வையிடுவது முறைப்பாடுகளைப் பெறுவது என்பவற்றுடன் நின்றுவிடாது நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரச தலைவர்களும் ஒட்டகப்புலம் மக்களின் காணிகளைப் பாதுகாப்பதற்கு முன்வரவேண்டும். திட்டமிட்ட கொள்ளைக் கும்பல்களின் செயல்களைக் கண்டும் காணாதவர்களாக இருந்தவிடக்கூடாது.

# ராசாவைத் துரும்பாக வைத்த ரணில்...!

**வி.அருணாசலம்**

கடந்த ஒரு மாத காலப்பகுதியில் இலங்கையில் என்றுமில்லாத அளவு நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. அது அரசியலிலும் பொருளாதாரத்திலும் அதிக பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது. சாதாரண கூலித் தொழிலாளர் தொடக்கம் பெருவர்த்தகர், உயர் பதவி வகிப்போர், விவசாயிகள், மீன்பிடி மற்றும் கைத்தொழிலாளர்கள் என அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதைத் தாங்க முடியாத மக்கள் 'கோத்தா கோ ஹோம்'' என்ற மகுட வாசகத்துடன் போராட்டத்தில் களமிறங்கினர். அதன் மையமாகக் காலி முகத்திடல் மாறியது.

இந்த நெருக்கடியால் ராஜபக்ச குடும்பத்திலிருந்த அமைச்சர்கள் தமது பதவிகளைத்த துறந்தனர். அதன் பின்னர் அரசிலிருந்து தலைமை அமைச்சர் வெளியேறினார். நிலமை மாறியது. எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாசவைத் தலைமை அமைச்சராகப் பதவியேற்குமாறு அழைத்தபோது அரச தலைவர் பதவி விலகினால் மட்டுமே தான் தலைமை அமைச்சர் பதவியை ஏற்பேன் என்றார் சஜித். இந்த நிலையில் தனி ஒருவராக நாடாளுமன்றில் இருந்த ரணில் விக்கிரமசிங்க காட்ஸ் விளையாட்டில் ஜக்கை (ராசாவை) துரும்பாகக் கவிழ்த்தார். அதை இன்னொரு ஜக்கால் கூட யாரும் வெட்ட முடியாது என்பதே அந்த விளையாட்டின் நிபந்தனையாகும். அதையே அரசியலில் ரணில் செய்திருக்கிறார்.

**எதிர்க்கட்சிகளின் முரண்பாடுகள்**

கோத்தாபய அரசுக்கு எதிரான கட்சிகளுக்குள் ஒருங்கிசைவான தலைமை இல்லை. ஜே.வி.பி. தனியாக அரசியல் செய்வதை விரும்புகிறது. மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி தனி அரசியலையும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தமது எதிர்கால அரசியலை இலக்காகக் கொண்டும் செயற்படுகின்றன. இந்த எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை சரியாகப் போணப்பட்டிருந்தால் ஒரு மாதத்துக்கு மேல் ஆர்ப்பாட்டங்களைத் தொடர வேண்டிய நிலை இருந்திருக்காது. இழப்புகளும் தவிர்க்கப்பட்டிருக்கும்.

காலிமுகத்திடலில் போராடுபவர்கள் அனுர குமார திசாநாயக்காவை ஏன் கலைக்க முற்படவில்லை என்ற கேள்வியைப் பாதுகாப்புச் செயலர் கமல்குணரட்ண கேட்டிருப்பது காலிமுகத்திடல் போராட்டத்தின் ஊக்கியாக ஜே.வி.பி செயற்படுகிறது என்பதை மறைமுகமாகக் குறிப்பிடுவதாக உள்ளது.

இத்தகைய அரசியல் இடைவெளியையும் முரண்பாடுகளையும் மிகவும் திட்டமிட்ட வகையில் தனி ஒருவராக நின்று ரணில் விக்கிரமசிங்க கையாண்டிருப்பது தெரிகிறது. அவர் பதவியேற்றதும் முதலில் அதை அமெரிக்கா வழிமொழிந்தது. பின்னர் இந்தியா, மேற்கு நாடுகள் என வரவேற்றன. எதிர்க்கட்சிகள் தாம் தனித்தனியாகச் செய்வதற்கு எண்ணியிருந்த எல்லா முன்னெடுப்புகளையும் ரணில் விக்கிரமசிங்க தான் கவிழ்த்த துரும்புச்சீட்டால் வலுவிழக்கச் செய்தார்.

இனி ரணில் விக்கிரமசிங்கவால் எடுக்கப்படவுள்ள பொருளாதார மீட்சி நடவடிக்கைகள் நாளுக்குநாள் வலுவடையும் நிலையில் மக்களின் போராட்ட மனநிலை மாற்றமடையும். எதிர்க்கட்சிகள் தமது ஆதரவாளர்களை எதிர்ப்புப் போராட்டத்துக்கு அழைப்பது கூடச் சிக்கலாகிவிடும். பட்டினி என்பது பெருந்தொகையான மக்களுக்குப் பொதுவானதாக ஆகியுள்ள நிலையில் மொழி, மதம், பிரதேசம், இனம் கடந்து ரணிலை ஆதரிக்கும் நிலையே ஏற்படும்.

ராஜபக்சாக்களாலும் எதிர்க்கட்சிகளாலும் செய்யமுடியாதுபோன இந்த முயற்சியை ரணில் பொறுப்பேற்றது என்பது இலங்கை அரசியலையே திசை திருப்பியிருக்கிறது. சஜித் பிரேமதாசாவின் புத்திபூர்வமற்ற அணுகுமுறைகளும் மந்தமான செயந்பாடுகளும் ரணில் விக்கிரமசிங்க என்ற தனி மனிதனுக்கு வழிவிட்டுக்கொடுத்திருக்கின்றன.

முதலை தரையில் நிற்கும்போது பலவீனமாகவே இருக்கும். அந்த நிலையில் இருந்த ரணில் என்கிற முதலையை எதிர்க்கட்சிகள் சேர்ந்து தண்ணீருக்குள் தள்ளி விட்டிருக்கின்றன. இனி எவ்வாறு நீந்துவது என்பது ரணிலுக்கு கைவந்த கலை. எதிர்க்கட்சிகளின் நிகழ்ச்சி நிரலில் இருந்த குறைபாடே இந்தப் புதிய பாதையை உருவாக்கியிருக்கிறது. இந்தச் சூழலில் எதிர்க்கட்சிகளால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் படிப்படியாகச் செயலிழக்கவே வாய்ப்புண்டு. ரணில் கவிழ்த்த துரும்புச் சீட்டை யாரும் வெட்ட முடியாது. ஏனெனில் ஆறாவது தடவையாக இலங்கையின் தலைமை அமைச்சராகப் பதாவியேற்றிருக்கும் அவர் நாடாளுமன்ற நடைமுறைகள் நன்கு தெரிந்தவர்.



# அண்ணாமலை என்ன, அமித்ஷா இலங்கைக்கு வந்தாலும் ஈழத் தமிழர்களைப் பிரிக்க முடியாது

## எழுத்தாளர் ஷோபா சக்தி நேர்காணல்



இலங்கையில் பிறந்து பின்னர் புலம்பெயர்ந்தவர் ஷோபாசக்தி. தமிழ் உலகில் கவனிக்கப்படும் எழுத்தாளர்களில் ஒருவர். 1997ல் தன் முதல் சிறுகதையை எழுதிய ஷோபா சக்தி, எழுத்துலகில் கால்நூற்றாண்டுப் பயணத்தைக் கடந்திருக்கிறார். தன் புதிய நாவல் பணிக்காகத் தமிழகம் வந்தவரை ஆனந்தவிகடன் வாரஇதழ் சந்தித்து இலங்கையின் தற்போதைய நிலை, இலக்கியம், சினிமா என்று பல தளங்களில் நேர்காணல் நடத்தியது. அதனை செம்மண் வாசர்களுக்காக அப்படியே தருகின்றோம்.

**"இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?''**

``இது ஏற்கெனவே எதிர்பார்த்த ஒன்றுதான். இலங்கையின் இடதுசாரி அறிஞர்கள் இதுகுறித்துத் தொடர்ச்சியாக எச்சரித்து வந்தார்கள். 1977இல் ஜெ.ஆர்.ஜெயவர்த்தனே இலங்கையின் அரச தலைவரான பிறகு திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கொண்டுவந்தார். அதற்கு முன்பான காலத்தில் இலங்கை உள்நாட்டு உற்பத்தி, பொதுத்துறை நிறுவனங்களை ஊக்குவிக்கும் பொருளாதாரக் கொள்கை என்பவற்றைக் கடைப்பிடித்து வந்தது. அணிசேரா நாடுகளில் முக்கியப்பங்கு வகித்தது. ஆனால் ஜெயவர்த்தனே காலத்துக்குப் பிறகு இலங்கை முற்றிலும் அமெரிக்கச் சார்பு எடுத்தது. முதன்முதலாக அமெரிக்காவின் வானொலி அஞ்சல் நிலையம் (வொய்ஸ் ஒஃப் அமெரிக்கா) இலங்கையில் தொடங்கப்பட்டது. பிறகு படிப்படியாகப் பல்தேசிய நிறுவனங்களும் அந்நிய முதலீடுகளும் அதிகரித்ததுதான் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு முதன்மைக் காரணம். போர், கொவிட், ஊழல் போன்றவையெல்லாம் துணைக்காரணங்கள்தான். இப்போது இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதன் பெயரால் பன்னாட்டு நாணய நிதியம் போன்ற அமைப்புகள் இலங்கையில் தனியார்மயத்தை அதிகப்படுத்துவது, அரச உதவிகளை நிறுத்துவது போன்றவற்றுக்கு நிர்பந்திக்கின்றன.

இலங்கையின் பொருளாதார அடிப்படை விவசாய வளமும் மீன்பிடியும் பாரம்பரிய உற்பத்தியும்தான். என்னுடைய சிறுவயதில் மண்ணெண்ணெயும் சீனியும் வாங்க மட்டும் தான் கடைக்குப் போவோம். ஆனால் அந்த நிலை எல்லாமும் திறந்த பொருளாதாரக்கொள்கையால் மாறிவிட்டன. கோத்தாபய அரசு போனாலும் இந்த நெருக்கடியைச் சரிசெய்ய முடியாது. பொருளாதார அடிப்படைக் கொள்கையை மாற்ற வேண்டும். ஆனால் அமெரிக்க, சீன, இந்தியப் பெருநிறுவனங்களும் பன்னாட்டுச் சூழலும் அதை அனுமதிக்காது.

ஒருகாலத்தில் காந்தி, நேரு, பிடல் காஸ்ட்ரோ, மாவோ, மண்டேலா என்று தேசி யத் தலைவர்கள் இருந்தார்கள். இன்று அப் படி ஒருவரைச் சொல்ல முடியுமா? இன்று அரசுகளை நடத்துவது பெருநிறுவனங்கள் தான். அவர்கள் மூலதன நலனுக்காகக் கூட்டு சேர்கிறார்கள். அரசின் கொள்கைகளை வகுப்பவையாகவும், யார் ஆட்சிக்கு வரவேண்டும் என்று தீர்மானிப்பவையாகவும் பெருநிறுவனங்கள் தான் இருக்கின்றன. இதற்கு எதிராக உலகம் முழுக்க மக்களின் தன்னெழுச்சிப் போராட்டங்கள் நடந்தாலும் அமைப்பாக்கப்படாத போராட்டங்கள் மாற்றத்தை ஏற்படுத்தாது. இப்போது இலங்கையில் நடைபெறும் மக்கள் போராட்டமும் தலைமையில்லாத போராட்டமாகவே இருக்கிறது.''

**"1977களிலேயே தொடங்கிவிட்டது என்றால் இந்தப் பொருளாதாரக் கொள்கை பற்றிய தன்னுணர்வு ஈழ விடுதலை இயக்கங்களுக்கு இருந்ததா?''**

``நிச்சயமாக. தொடக்கத்தில் புலிகள் உட்பட அனைத்து இயக்கங்களும் சோஷலிசப் பொருளாதாரக் கொள்கையை முன்வைத்தன. திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு எதிர்ப்பு, சுயச்சார்புப் பொருளாதாரக் கொள்கை என்பதில் எல்லா இயக்கங்களும் உறுதியாக இருந்தன. விடுதலைப் புலிகள் 'சோசலிசத் தமிழீழத்தை நோக்கி' என்ற அறிக்கையையே வெளியிட்டார்கள். அதேபோல் புலிகள் உள்ளூர் உற்பத்தியையும் ஊக்குவித்தார்கள். பின்னாளில் 2002இல் வன்னியில் நடைபெற்ற பன்னாட்டுப் பத்திரிகையாளர் மாநாட்டில் பிரபாகரன் 'அமையப்போகும் தமிழீழத்தின் கொள்கை திறந்த பொருளாதாரக் கொள்கையே' என்று அறிவித்தது வீழ்ச்சி.'

**"2009இல் சிங்களர்களால் வெற்றி நாயகனாகக் கொண்டாடப்பட்ட ராஜபக்ஷேவுக்கு எதிராக சிங்கள மக்களே வீதியில் இறங்கிப் போராடுவதை எப்படிப் பார்க்கிறீர்கள்?''**

"இரண்டு பெரும் போர்களின் வெற்றி நாயகனான வின்ஸ்டன் சேர்ச்சிலை 1945 தேர்தலில் பிரிட்டன் மக்கள் நிராகரித்தனர். வெற்றிப்பெருமிதத்தைவிட வயிற்றுக்குச் சோறு முக்கியமில்லையா?"

**"நீண்டகாலமாக ஈழ இயக்கங்கள் திராவிட இயக்கத்துடன் நட்புடன் இருந்தார்கள். ஆனால் இப்போது பல ஈழத் தமிழர்கள் திராவிட எதிர்ப்பு பேசுகிறர்களே?''**

'ஈழ இயக்கங்களுக்கு முன்பிருந்தே பெரியார், திராவிட இயக்கத்தின் தாக்கம் ஈழத்தில் இருக்கிறது. 1927இல் யாழ்ப்பாணத்திலிருந்து 'திராவிடன்' என்ற இதழ் வெளியாகியிருக்கிறது. ஊருக்கு ஊர் அண்ணா மன்றங்களை வைத்திருந்தவர்கள் நாங்கள். இலங்கையில் தி.மு.கவுக்குக் கிளை இருந்தது. அது பின்பு அரசால் தடைசெய்யப்பட்டது. ஈழப் போராளிகளைத் தமிழகத்தில் அரவணைத்துப் பாதுகாத்தவர்கள் திராவிட இயக்கத்தவர்கள். அவர்கள் வெறும் வாய்ச்சொல் வீரர்களாக மட்டுமே இருக்கவில்லை. அவர்கள் வீசிய கை வெறும் கையாக ஈழத்துக்கு வந்து ஆமைக் கறி சாப்பிட்டு ஏப்பம் விட்டு எழுந்து வந்தவர்களல்லர். ஈழப் போராட்டத்துக்காக அவர்கள் வெளிப்படையாகவும் இரகசியமாகவும் பெரும் பணிகளைச் செய்தார்கள். அதற்காகப் பல்லாண்டுகளாகச் சிறையில் வாடினார்கள்.

ஈழத் தமிழர்களில் திராவிட இயக்க எதிர்ப்போ பெரியார் எதிர்ப்போ பேசும் ஒரேயொரு சிந்தனையாளரையோ, எழுத்தாளரையோ, அரசியல் தலைவரையோ, போராளி இயக்கத் தலைவரையோ காட்டுங்கள் பார்க்கலாம். அறிவுலகைச் சேர்ந்தவர்களோ களத்தில் நின்றவர்களோ யாருமே திராவிட இயக்கத்துக்கும் பெரியாருக்கும் எதிராகப் பேசியதும் இல்லை, செயற்பட்டதும் இல்லை. சமூக வலைதளங்களில் திராவிட எதிர்ப்பைக் கக்கும் ஒரு சிலரை வைத்து ஒட்டுமொத்த ஈழத் தமிழ்ச் சமூகத்தையும் மதிப்பிடக்கூடாது.'

**ஈழப் போராளிகளைத் தமிழகத்தில் அரவணைத்துப் பாதுகாத்தவர்கள் திராவிட இயக்கத்தவர்கள். அவர்கள் வெறும் வாய்ச்சொல் வீரர்களாக மட்டுமே இருக்கவில்லை. அவர்கள் வீசிய கை வெறும் கையாக ஈழத்துக்கு வந்து ஆமைக் கறி சாப்பிட்டு ஏப்பம் விட்டு எழுந்து வந்தவர்களல்லர்**

**"தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை இலங்கைக்குச் செல்கிறார். இலங்கையில் 'சிவசேனை' உருவாகியிருக்கிறது. இந்தப் போக்குகள் ஈழத்தமிழர்கள் மத்தியில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தும்?''**

'ஈழத்தமிழர்களை மத அடையாளத்தின் அடிப்படையில் பிரிக்கவே முடியாது. ஈழத் தமிழர்களிடையே எப்போதும் போலவே இப்போதும் மத நல்லிணக்கம் மிக உறுதியாகவே இருக்கிறது. இந்தியாவில் இந்துத்துவ அரசு இருப்பதால் இந்து அடையாளத்தைத் தூக்கிப்பிடித்தால் இந்திய ஒன்றிய அரசு நமக்கு உதவலாம் என்று காசி ஆனந்தனோ 'சிவசேனை' சச்சிதானாந்தனோ முட்டாள்தனமாக நினைக்கலாம். ஆனால் அவர்களுக்கு வெறும் ஐந்து பேர்கூட ஆதரவாக இல்லை என்பதுதான் உண்மை. பாரதிய ஜனதாக் கட்சி (பா.ஜ.க) அரசு இந்தியாவிலேயே தங்களை இந்துக்களாக நம்பும் பெரும்பான்மை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராகத்தானே இருக்கிறது. அண்ணாமலை என்ன, அமித் ஷா வந்தால்கூட ஈழத்தில் இந்துத்துவ அரசியல் செல்லுபடியாகாது.'

**''தற்போது என்னென்ன படங்களில் நடித்துக்கொண்டிருக்கிறீர்கள்?''**

'Notre - Dame on fire என்ற படம் இப்போது வெளியாகியிருக்கிறது. Woman at Sea, Tehu, Men in Blue போன்ற படங்கள் வெளியாகவிருக்கின்றன.'

**''தமிழ்ப் படங்களில் நடிக்கும் எண்ணமிருக்கிறதா?''**

# வல்லாரைக் கள்வன்...?



தயானுதன்

ஞாபகசக்தியை அதிகரிக்கச் செய்யும் வல்லாரை கீரை வகைத் தாவரம். வல்லமை மிக்க இலையை உணவாகத் தரும் கீரையாதலால் வல்லாரை என்று அதற்குப் பெயர் என்கிறார்கள் தமிழர்கள். அத்தகு வல்லாரையை ஆங்கிலத்தில் 'சென்ரெல்லா அஷியரிகா' (Centella asiatica) என்கிறார்கள். ஞாபக சக்தியை முதல்நிலைப்படுத்தி வல்லாரைக் கீரையைச் சிறப்பித்தாலும் அது ஞாபக சக்தியை மாத்திரம் உடலுக்கு அளிக்கும் வல்லமையுடன் தன்னை மட்டுப்படுத்திவிடவில்லை என்பது பலர் அறியாத சங்கதி.

வைத்தியர்கள் வல்லாரையிலுள்ள பல்வேறு ஆற்றல்களை அறிந்து அதைக்கொண்டு பல்வேறு மருத்துவங்களைச் செய்து வருகிறார்கள். சாதாரண மக்களோ வல்லாரையைச் சம்பல், சட்னி, இலைக்கறி என ஆக்கியுண்ணும் பழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இப்போது வல்லாரைப் போலிகள் பல உலா வரத் தொடங்கியுள்ளன. இந்த நிலை அதிகரித்துமிருக்கிறது. இதனால் வழமையான வல்லாரைக் கீரையை மெல்ல மெல்ல மறந்து வருகிறார்கள் மக்கள்.



வல்லாரை என்கிற பெயரில் வல்லாரையை தோற்றத்தில் ஒத்திருக்கும் பிறிதொரு வகைக் கீரை வகையை உண்ணும் கலாசாரம் ஒன்றும் அந்தப் பிறிதொரு வகைக் கீரையை வல்லாரை என்று சொல்லி விற்பனை செய்யும் கலாசாரம் ஒன்றும் நம்மூர்களில் விரவியிருக்கிறது.

**வல்லாரையைப்போன்ற இலைக் கீரை**

வல்லாரையை ஒத்தவகை இலையைக் கொண்ட பிறிதொரு கீரை வகை ஒன்றை நம்மவர்களில் பலரும் உண்டுவருகிறோம் என்பது பலருக்கும் ஆச்சரியத்தைத் தரலாம். அச்சு அசலாக வல் லாரையைப் போல இருந்தாலும் வல்லாரைக்கும் அந்தக் கீரை வகைக்கும் நிறையவே வித்தியாசங்கள் உண்டு. கிட்டத்தட்ட தாமரை இலையைப் போன்ற வட்ட வடிவத் தோற்றத்திலும் கரும் பச்சை நிறத்தி லும் இருக்கின்ற அந்த இலைச் செடிக்கு ஆங்கிலத்தில் 'ஹய்ட்ரோஹொடில் அம்பெல்லரா' (Hydrocotyle umbellate) என்று பெயர். பார்ப்பதற்கு வல்லாரையைப் போலவே இருக்கும். வல்லாரையைப் போல மருத்துவ மூலிகையாகப் பயன்படுத்தப்படுகிறது என்றாலும் இதுகளை யாகவே பார்க்கப்படுகிறது.

சிற்சில மருத்துவத் தேவைகளுக் காக ஏற்ற விதத்தில் தயார் செய்யப்பட்டு இதை மருத்துவத்தில் பயன்படுத்துகிறார்கள். ஆனால் வல்லாரை என்று எண்ணி நம்மில் பலர் இதை நேரடியாகவே (அவிக்காமல்கூட) உணவாக்கிக்கொள்கிறார்கள். இதனால் பாரதூரமான பக்கவிளைவு கள் இல்லாவிடினும் வல்லாரைக் கீரையில் இருக்கின்ற - வல்லாரைக் கீரையில் கிடைக்கின்ற ஊட்டங்களை இதனால் தர முடியாது என்பதே உண்மை.

வல்லாரையானது வட்ட வடிவிலான இலைகளைக் கொண்டிருந்தாலும் அதன் வட்ட முனைகள் கூர்மைகளுடன் காணப்படும். ஆனால் இந்தத் தாவரத்தின் இலைகளோ தாமரை இலைகளைப்போல வட்ட வடிவ விளிம்புகளைக் கொண்டிருக்கும். அத்தோடு வல்லாரை இலையிலுள்ள நரம்புகளின் தழும்புகள் சிறிய பள்ளங்களைக் கொண்டிருக்க இந்த இலை மேடு -பள்ளங்களின்றி (நம்புகளின் தழும்புகளின்றி) சீராக இருக்கும். அத்தோடு பசுமையும் பச்சையத்தின் அளவும் அதிகமாக இருக்கும். வல்லாரைக் கீரையானது பச்சையம் குறைந்த மஞ்சள், வெளிர்மஞ்சள், வெளிர் பச்சை ஆகிய நிறங்களைப் பெற்றாலும் இந்த இலை அவ்வாறு இருப்பதில்லை. அத்தோடு இலை மற்றும் தண்டுப் பகுதிகளில் நீர்ப்பிடிப்பு அதிகமுள்ளதால் இந்த இனம்தெரியாத கீரை வகையை முறிக்கும் போது சுலபமாக முறிவடையும். எனவே தோற் றத்தில் ஒத்திருக்கின்ற வல்லாரைக்கள் வனைக் கண்டுபிடிப்பது இனி உங்கள் அனைவரதும் பணி. உணவே மருந்து என்பதால் உணவை அறிந்து உள்ளெடுப்பதும் நமக்கு அத்தியவசியமானது.

# அண்ணாமலை ...

'இல்லாமல்? பிரெஞ்சிலும் ஆங்கிலத்திலும் பேசி நடிப்பதைவிட என்னுடைய தாய் மொழியைப் பேசி நடிக்கும்போதே என்னுடைய முழுத் திறனும் வெளிப்படும் என்றே நம்புகிறேன். தமிழகத்திலிருந்து சில அழைப்புகள் வந்தாலும் நாள்களை ஒதுக்குவதிலுள்ள சிக்கல்கள், கதையின் மீது ஈர்ப்பின்மை போன்ற வெவ்வேறு காரணங்களால் தள்ளிப் போய்க்கொண்டேயிருக்கிறது.'

**"உங்கள் புதிய நாவல் பற்றி..."**

'ஸலாம் அலைக்' என்பது நாவலின் பெயர். 'ஜெனிவா 1951' உடன்படிக்கைதான் அகதி என் றால் யார், அவர் எப்படி நடத்தப்படவேண்டும் என்பது போன்ற பல பன்னாட்டு வரையறைகளை உருவாக்குகிறது. இந்தியா, தாய்லாந்து போன்ற பல நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை. ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட ஐரோப்பிய நாடுகள் அகதிகளைக் கையாளும் முறையை இந்த நாவல் விசாரணை செய்கிறது. அகதிகள் ஐரோப்பாவில் எதிர்கொள்ளும் நிறவாதத்தையும் இனவாதத்தையும் என் அனுபவ வலியால் சித்திரித்துள்ளேன். ஐரோப்பாவின் இரட்டை முகத்தைப் போலவே இந்த நாவலும் இரண்டு முகமுடையது. நாவலை எந்த முனையிலிருந்தும் தொடங்கிப் படிக்கலாம்.

03

# மணலைகளின் வெற்றி

வில்லியம் பாக்னர்
தமிழில் கார்குழலி

(கடந்த வார தொடர்ச்சி)

'இங்கே பார். தெளிவாக யோசித்துப் பேசு. உனக்கு நினைவில்லையா? அறைக்குள் வந்த போது உன் தந்தை வெளியே அனுப்பினாரே, அந்த ஒரு முறை தவிர வேறு எப்போதும் அவளை நான் பார்த்ததே இல்லை.'

'ஆனால் அப்போது அவளைப் பார்த்தீர்களே? அவளும் உங்களைப் பார்த்தாளே?'

'இல்லை,' என்றான் வெடெல்.

சிறுவன் அழுவதை நிறுத்தினான். இன்னமும் வெடெலுக்கு மேலே அசையாமல் நின்றான்.

'என்ன இல்லை?'

'நான் அதைச் செய்யமாட்டேன். உன் ஏணியில் ஏறி வரமாட்டேன்.'

அவனுக்கு மேலே நின்றபடி சிறிது நேரம் அசை யாமல் ஓசையில்லாமல் மெதுவாக மூச்சுவிட்டான் சிறுவன். கனவில் பேசுபவன் போலப் பேசினான். 'நான் உன்னை எளிதாகக் கொல்ல முடியும். என்னைவிடவும் பெரியவனென்றாலும் உனக்கு ஒரு கை மட்டுமே இருக்கிறது...' நம்பமுடியாத வேகத்தோடு திடீரென நகர்ந்து வெடெலின் கழுத்தைத் தன்னுடைய பெரிய கடினமான கைகளால் நெறித்தான். வெடெல் நகரவில்லை. 'உன்னை எளி தாகக் கொன்றுவிடுவேன். அதைப் பொருட்படுத் தவும் யாருமில்லை.'

'ஷ்ஷ்ஷ்ஷ்ஷ், சத்தமாகப் பேசாதே,' என்றான் வெடெல்.

'யாரும் பொருட்படுத்தமாட்டார்கள்." வெடெ லின் கழுத்தைச் சிரமத்தோடு இறுக்கிப் பிடித்திருந் தான். சிறுவனின் ஆற்றல் கைகளை வந்தடை வதற்கு முன்னரே அவனுடைய தோள்பட்டை, முன்கை ஆகிய பகுதிகளில் சிதறுவதை வெடெல் லால் உணர முடிந்தது. அவன் மூளைக்கும் கைகளுக்கும் இடையே இருக்கும் தொடர்பு முற்றுப்பெறாதது போலத் தோன்றியது. 'யாரும் பொருட்படுத்தமாட்டார்கள். வேட்ச் மட்டும் கோபப்படுவான்.'

'என்னிடம் கைத்துப்பாக்கி இருக்கிறது,' என்றான் வெடெல் .

'அப்படியானால் என்னைச் சுடு.'

'வேண்டாம்.'

'ஏன் வேண்டாம்?'

'நான் முன்னரே சொன்னேனே?'

'செய்யமாட்டேன் என்று சத்தியம் செய்வாயா?'

'ஒரு நொடி நான் சொல்வதைக் கேள்,' என்றான் வெடெல். இப் போது சிறுவனுக்கு அமைதியூட்டும் குரலில் பேசினான். ஒற்றை ஓசைச் சொற்களில் ஒரு குழந்தையிடம் பேசுவது போலப் பேசினான். 'நான் வீடு போய்ச் சேரவேண்டும். அவ்வளவுதான். வீட்டை விட்டு வந்து நான்கு வருடமாகிவிட்டது. அதனால் என் ஆசையெல்லாம் வீட்டுக்குப் போக வேண்டும் என்பது மட்டுமே. உனக்கே அது தெரியுமே? அங்கே நான் விட்டுவந்ததை எல்லாம் நான்கு வருடம் கழித்துப் பார்க்கவேண்டும்.'

'அங்கே என்ன செய்தாய்?' வெடெல்லின் கழுத்தைப் பற்றிய சிறுவனின் பிடி இளகியது, மீண்டும் கடினமானது. அவனுடைய கைகள் விறைப்பாக இருந்தன. 'சவாரி செய்ய குதிரையும் ஏவிய வேலையைச் செய்ய கறுப்பினத்தவர்களும் இருப்பதால் நாள் முழுவதும் வேட்டையாடுவாயா? பிடித்திருந்தால் இரவிலும் அதையே செய்வாயா? உன் காலணிக்கு மெருகேற்றவும் குதிரைக்குச் சேணம் பூட்டவும் பணியாட்கள் இருப்பதால் மீண்டும் வேட்டையாடப் போகும் வரையிலும் மேசையில் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டே இருப்பாயா?'

'அதைத்தான் எதிர்பார்க்கிறேன். ஆனால் வீட்டை விட்டு வந்து நான்கு வருடமாகிவிட்டது. அதனால் எதுவும் தெளிவாகத் தெரிய வில்லை.'

'என்னையும் கூட்டிப்போ.'

'அங்கே என்ன இருக்கிறதென்று எனக்கே தெரியாது. அங்கே சவாரி செய்ய குதிரைகளோ வேட்டையாட உயிரினங்களோ, எதுவுமே இல்லாமல் போகலாம். அங்கேயும் யாங்கிகள் வந்தார்கள். அதற்கடுத்து என் அம்மா இறந்துபோனாள். நான் போய் பார்க்கும் வரையில் அங்கே என்ன நிலைமை என்பது தெரியாது.'

'நான் வேலை செய்வேன். இருவரும் வேலை செய்வோம். நீங்கள் மேய்ஸ்ஃபீல்டில் திருமணம் செய்துகொள்ளலாம். பக்கத்தில்தான் இருக்கிறது.'

'திருமணமா? ஓ.. உன்னுடைய... அதுதானே பார்த்தேன்! எனக்கு



ஏற்கெனவே மணமாகவில்லை என்பது உனக்கு எப்படித் தெரியும்?' சிறுவனின் பிடி இறுகியது. அவனை உலுக்கினான். 'நிறுத்து!'

'உனக்கு மனைவி இருக்கிறாள் என்று சொன்னால் கொன்றே விடுவேன்,' என்றான் சிறுவன்.

'இல்லை, எனக்கு மணமாகவில்லை.'

'அந்த ஏணியில் ஏறும் எண்ணமில்லையா?'

'அவளை ஒரேயொரு முறைதான் பார்த்தேன். மீண்டும் பார்த்தால் அடையாளம் தெரியுமா என்றுகூடத் தெரியவில்லை.'

'அவள் வேறுமாதிரி சொல்கிறாள். உன்னை நம்பமாட்டேன். பொய் சொல்கிறாய்.'

'இல்லை,' என்றான் வெடெல்.

'நீ பயப்படுவதால் அப்படிச் சொல்கிறாயா?'

'ஆமாம். அதேதான்.'

'வேட்ச்சைப் பார்த்தா?'

'இல்லை, வேட்ச்சைப் பார்த்து அல்ல. என்னுடைய அதிர்ஷ்டம் தீர்ந்து போய் விட்டதென்று நினைக்கிறேன். அதுகுறித்து அச்சப்படுகிறேன். நீண்ட காலம் தாக்குப்பிடித்து விட்டேன். அச்சப்படுவது எப்படி என்பதை மறந்து விட்டேனோ என்று தோன்றுகிறது. அதனால் அந்த இடரை எதிர்நோக்க விரும்பவில்லை. உண்மையோடு எனக்கிருக்கும் உறவு அற்றுவிட்டது என்பதை எதிர்கொள்ளும் திராணியில்லை. நான் ஜுபலைப் போல அல்ல. நான் இன்னமும் அவனுக்குத்தான் சொந்தம் என்று நினைக்கிறான்; அதனால் நான் விடுதலை பெற்றதை அவனால் நம்பமுடியாது. அவனிடம் அதைச் சொல்லக்கூட அனுமதிக்க மாட்டான். உண்மையைத் தெரிந்துகொள்ளும் அவசியம் அவனுக்கு இல்லை, புரிகிறதா?'

'நாங்கள் வேலைசெய்வோம். அவள் பார்ப்பதற்கு எந்நேரமும் காலணிகளை அணிந்துகொண்டிருக்கும் மிஸ்ஸிஸிப்பி பெண்களைப் போல இருக்கமாட்டாள். ஆனால் எல்லாவற்றையும் கற்றுக்கொள்வோம். அவர்களின் முன்னால் உனக்கு அவமானம் ஏற்படும் வகையில் நடக்கமாட்டோம்.'

'இல்லை, என்னால் முடியாது,' என்றான் வெடெல்.

'உன் வழியில் போய்விடு. இப்போதே கிளம்பு.'

'எப்படிப் போக முடியும்? அவனால் குதிரை மீது உட்காரவோ ஓட்டவோ முடியாது என்பதை நீயே பார்க்கிறாயே.' சிறுவன் உடனடியாகப் பதிலளிக்கவில்லை. ஒரு நொடி கடந்ததும் அவனுக்குள் ஏற்பட்ட பதற்றத்தையும் எதையும் செய்ய முடியாமல் திணறுவதையும் வெடெல்லால் உணர முடிந்தது. ஓசையேதும் கேட்கவில்லை என்றாலும் தரையில் மண்டியிட்டபடியே மூச்சை உள்ளிழுத்துக்கொண்டு ஏணியைப் பார்ப்பதை உணர முடிந்தது.

'யார்?' முணுமுணுப்பாகக் கேட்டான் வெடெல்.

'அப்பா.'

'நான் போய் பார்க்கிறேன். நீ இங்கேயே இரு. என்னுடைய கைத்துப்பாக்கியை வைத்துக்கொள்.'

X

அத்தனை உயரத்தில் அந்த இருண்மையான சூழலில் காற்று ஈரமாகவும் குளிர்ச்சியாகவும் இருந்தது. கண்ணுக்குப் புலப்படாத இருளுக்குள் முழுகிக் கிடந்தது பள்ளத்தாக்கு. எதிரே இருந்த மலைத்தொடர் குளிர்ச்சியாகவும் கருமையாகவும் இருந்தது, அது இருப்பதே கண்ணுக்குத் தெரியவில்லை.

'எம்பு,' என்றார் அந்தத் தந்தை.

'போர் முடிந்துவிட்டது. வேட்ச்சின் வெற்றி என் பிரச்சினையல்ல,' என்றான் வெடெல்.

'குதிரைகளையும் கறுப்பினத்தவனையும் கூட்டிக்கொண்டு கிளம்பு.'

'இது உங்கள் மகளைக் குறித்தது என்றால் அவளை ஒருமுறை மட்டுமே பார்த்தேன். இனி அவளைப் பார்க்கும் எண்ணம் இல்லை.'

'கிளம்பு. உன்னுடையவற்றை எடுத்துக்கொண்டு கிளம்பிப் போ,' என்றார்

தந்தை.

'முடியாது.' இருட்டில் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு நின்றார்கள். 'நான்கு வருடங்களுக்குப் பிறகு தப்பியோடுவதில் இருந்து விடுதலை பெற்றிருக்கிறேன்.'

'விடியும் வரையில் அவகாசம் இருக்கிறது.'

'கடந்த நான்கு வருடங்களில் வர்ஜினியாவில் இதைக் காட்டிலும் குறைவாகவே இருந்தது. இது டென்னெஸ்ஸி ஆயிற்றே.' தந்தை அங்கிருந்து நகர்ந்து சரிவான பாதையில் நடந்தார், கொஞ்ச நேரத்தில் இருட்டுக்குள் மறைந்தார். வெடெல் இலாயத்துக்குள் நுழைந்து ஏணியில் ஏறினான். குறட்டை விட்டுக்கொண்டு இருந்த கறுப்பினத்தவனுக்கு அருகே அசைவின்றி உட்கார்ந்திருந்தான் சிறுவன்.

'அவனை இங்கேயே விட்டுப்போ. கறுப்பினத்தவன்தானே? அவன் இருக்கட்டும், நீ கிளம்பு.'

'மாட்டேன்,' என்றான் வெடெல்.

சிறுவன் வெடெல்லை நேருக்கு நேர் பார்க்கவில்லை என்றாலும் இருவருக்குமிடையே நிலவிய அமைதியில் மரங்களடர்ந்த நிலம் இருந்தது, வெடிக்கும் துப்பாக்கியின் ஓசை இருந்தது, முன்னங்கால்களை வானில் உதைத்து மேலெழும் குதிரை எழுப்பும் வலிமையான இடியோசை இருந்தது, சுருண்டெழும் புகை இருந்தது. 'பள்ளத்தாக்கிற்குப் போகும் குறுக்கு வழியைக் காண்பிக்கிறேன். இங்கிருந்து இரண்டு மணிநேரத்தில் போய்ச் சேர்ந்துவிடலாம். விடிவதற்குள் பத்து மைல் தூரத்தைக் கடந்திருப்பாய்.'

'முடியாது. அவனும் வீட்டுக்குப் போக வேண்டும் என்று ஆசைப்படுகிறான். அவனையும் அழைத்துப் போகவேண்டும்.' கீழே குனிந்து கறுப்பினத்தவன் போர்த்தி இருந்த மேலங்கியை ஒற்றைக் கையால் நேர் செய்தான். சிறுவன் அங்கிருந்து தவழ்ந்து செல்லும் ஓசை கேட்டது, ஆனாலும் பார்க்கவில்லை. சிறிது நேரத்தில் கறுப்பினத்தவனை உலுக்கினான். 'ஜுபல்.' கறுப்பினத்தவன் முனகியபடி திரும்பிப் படுத்துத் தூங்கினான். சிறுவனைப் போலவே அவனருகே குத்துக்காலிட்டு உட்கார்ந்தான் வெடெல். 'எல்லாவற்றையும் முற்றிலும் இழந்துவிட்டேன் என்று நினைத்தேன்; அமைதியையும் மௌனத்தையும் அச்சப்படுவதற்கான ஆற்றலையும் என அனைத்தையும்,' என்றான்.

## XI

அந்தக் குளிர்கால விடியலில் இரண்டு குதிரைகளும் இடிந்துபோன வாயில்கதவு வழியாகச் சாலைக்குள் நுழைந்தபோது அந்த வீடு இறுக்கமாகவும் வெறுமையாகவும் இருந்தது. கறுப்பினத்தவன் உயர்ரகக் குதிரையிலும் வெடெல் பெண் குதிரையிலும் சவாரி செய்தனர். கறுப்பினத்தவன் குளிரில் நடுங்கினான். கூன் போட்டுக்கொண்டு முட்டியை மேலே மடக்கி குத்த வைத்திருந்தான். மேலங்கியின் முக்காடு அவன் முகத்தை முழுவதும் மறைத்தது.

'அந்தத் திரவத்தைக் குடிக்கவைத்து நம்மைப் பழிவாங்குகிறார்கள் என்று சொன்னேனே? மலையகத்து முரடர்கள். அவர்கள் என்னை மயக்கமுற வைப்பதற்கு நீயும் உடந்தையாய் இருந்தாய். உன் கையால் எனக்கு அதைக் கொடுத்தாய். கடவுளே! கடவுளே! வீடு போய் சேருவோமா?'

பின்னால் திரும்பி வீட்டைப் பார்த்தான். அந்த இடிந்துபோன வெறுமையான வீட்டில் யாரும் இருப்பது போலவே தெரியவில்லை. புகைகூட எழும்பவில்லை.

'அவளுக்கென இளைஞன் ஒருவன் இருக்கிறான். காதலனாக இருக்கலாம்.' ஆச்சரியமும் யோசனையும் மேலிட உரத்த குரலில் பேசினான். 'அந்தச் சிறுவன் ஹுல். சாலை மறையும் இடத்தில் வட்ட வடிவில் மரங்கள் அமைந்திருக்கும் பகுதியை அடைந்தவுடன் இடது பக்கம் திரும்பச் சொன்னான். அந்த மரமடர்ந்த பகுதியை கடக்க வேண்டாம் என்றான்.'

'யார் என்ன சொன்னது?' கேட்டான் கறுப்பினத்தவன். 'நான் எங்கேயும் வரவில்லை. மீண்டும் பரணில் ஏறிப் படுத்துக்கொள்ளப் போகிறேன்.'

'சரி, கீழே இறங்கு,' என்றான் வெடெல்.

'கீழே இறங்கவா?'

'எனக்கு இரண்டு குதிரைகளும் தேவை. தூக்கம் கலைந்த பிறகு நீ நடந்து வா.'

'உன் அம்மாவிடம் சொல்லப் போகிறேன். எல்லோரிடமும் சொல்லப் போகிறேன். நான்கு வருடங்களான பிறகும் யாங்கியைப் பார்த்தால் அடையாளம் கண்டுகொள்ளும் அளவு புத்தியில்லை என்பதைச் சொல்லப் போகிறேன். ஓர் இரவு முழுவதையும் யாங்கியின் வீட்டில் கழித்து, உன் கறுப்பினத்தவனை அவர்கள் தொலைத்துக் கட்ட அனுமதித்தாய் என்று சொல்லப்போகிறேன்.

'நீ இங்கேயே தங்கப் போகிறாய் என்றல்லவா நினைத்தேன்?' என்றான் வெடெல். இப்போது அவனும் நடுங்க ஆரம்பித்தான். 'இருந்தாலும் எனக்குக் குளிரவில்லை,' என்றான். 'எனக்குக் குளிரவில்லை.'

'இங்கேயே தங்குவதா? நான் இல்லாமல் எப்படி வீடு போய்ச் சேர்வாய்? நீ இல்லாமல் நான் வீட்டுக்குப் போனால் எஜமானியம்மாளின் கேள்விக்கு என்ன பதில் சொல்வேன்?'

'வா,' என்றபடி குதிரையை முடுக்கிவிட்டான் வெடெல்.

பின்னால் திரும்பி எதுவும் சொல்லாமல் வீட்டைப் பார்த்தான். அங்கிருந்து நகரத் தொடங்கினான். அவனுக்குப் பின்னால் உயர்ரகக் குதிரையில் இருந்த கறுப்பினத்தவன் தனக்குத்தானே எதையோ முணுமுணுத்தான். அது சோகப் பாடலைப் போல ஒலித்தது. நேற்று சிரமப்பட்டு ஏறி வந்த சாலை இன்று கீழ்நோக்கி இறங்கியது. சேறும் சகதியுமாக இருந்த சாலையில் அங்குமிங்கும் பாறைகள் கிடந்தன. மேடும் பள்ளமுமாக இருந்த வெறுமையான பாதை தொடுவானத்தோடு கலந்து மறைந்தது. கரடுமுரடாகப் பயணப்பட்ட சாலை திடீரென பைன் மரங்கள் அடர்ந்த பகுதியைச் சென்று சேர்ந்தது. அந்த இடத்தில் இருந்து கொஞ்ச தூரத்தில் பார்வையில் இருந்து மறைந்தது வீடு.

'ஆக, நான் ஓடிப்போகிறேன்,' என்றான் வெடெல். 'வீடு போய்ச் சேர்ந்ததும் இது குறித்து பெருமைபடக்கூடமுடியாது. ஆமாம், இது குறித்துப் பேசுவேன். நான் உயிரோடு இருக்கிறேன் என்று பொருள் அல்லவா? அச்சத்தையும் ஆசையையும் உணர முடிவதால் உயிரோடு இருக்கிறேன். வாழ்க்கை கடந்த காலத்தை உறுதிசெய்கிறது, எதிர்காலம் குறித்த நம்பிக்கையை அளிக்கிறது. அதனால் இன்னும் உயிரோடு இருக்கிறேன். ஆஹ்.' லாரல் மரங்கள் அடர்ந்த பகுதியை அடைந்தார்கள்.

சுமார் அறுநூறு அடிக்கு முன்னால் எந்த



முன்னறிவிப்புமின்றி ஈரப்பதம் நிறைந்த வானத்தின் நடுவே தோன்றிய அதிசயமான விஷயம் போல இருந்தது அது. முக்காடால் மூடிய முகத்துடன் உட்கார்ந்திருந்த கறுப்பினத்தவன் அவனையும் அறியாமல் திடீரென இலகானை வேகமாக இழுத்ததும் குறிப்பிட்ட தூரத்துக்கு மேலாகப் பயணப்பட்ட உயர்ரகக் குதிரை தானாகவே நின்றது.

'எந்தப் பாதையும் தெரியவில்லையே…' என்று வெடெல் சொல்லச் சொல்ல மரங்களுக்கு பின்னால் இருந்து ஓர் உருவம் அவர்களை நோக்கி ஓடி வந்தது. இலகான் கயிற்றைத் தொடை இடுக்கில் சொருகிக்கொண்டு கையை மேலங்கிக்குள் நுழைத்தான் வெடெல். அப்போதுதான் சிறுவனை அடையாளம் தெரிந்தது. வேகமாக ஓடி வந்தான். முகம் வெளிறிப்போய் சோர்வுற்றிருந்தது. கண்கள் துயரச் சாயலைப் பூசியிருந்தன.

'அதோ அந்தப் பக்கம் இருக்கிறது,' என்றான்.

'நன்றி. நாங்களே கண்டுபிடித்திருப்போம் என்றாலும் நேரில் வந்து காண்பித்தமைக்கு நன்றி.'

'ஆமாம்,' என்று அவன் சொன்னதைக் கேட்காதது போலப் பேசினான் சிறுவன். பெண் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்திருந்தான். 'புதருக்கு நேர் பின்னே இருக்கிறது. பக்கத்தில் போகும் வரையில் கண்ணுக்குத் தெரியாது,' என்றான்.

'என்னது? எல்லோரிடமும் சொல்லப் போகிறேன். நான்கு வருடங்களான பிறகும் உனக்குக் கொஞ்சமும் அறிவில்லை என்று…' படபடத்தான் கறுப்பினத்தவன்.

'ஷ்ஷ்ஷ்ஷ்,' என்றான் வெடெல். 'உனக்கு நன்றிக்கடன்பட்டிருக்கிறேன். அதைவிடச் சிறந்தது எதுவுமில்லை என்பதால் அதை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். வீட்டுக்குத் திரும்பிப் போ. நாங்கள் பாதையைக் கண்டுபிடித்து விடுவோம். இனி நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்.'

'அவர்களுக்கும் இந்தப் பாதை தெரியும்,' என்றான் சிறுவன். குதிரையை வழிநடத்தியபடி முன்னால் சென்றான். 'வாருங்கள்.'

'பொறு,' என்றபடி குதிரையை நிறுத்தினான் வெடெல். முன்னால் தெரிந்த மரங்களைப் பார்த்தபடியே சிறுவன் கடிவாளத்தைப் பிடித்து இழுத்தான். 'நாம் ஒருமுறையும் அவர்கள் ஒருமுறையும் ஊகம் செய்யலாம். அப்படித்தானே?'

'நீ நரகத்துக்குத்தான் போவாய். வா!' என்று கொஞ்சம் பரபரப்போடு சொன்னான் சிறுவன். 'எனக்கு உடம்பு சரியில்லாதது போல ஏதோ செய்கிறது. என்னவோ போல இருக்கிறது.'

தன்னைச் சுற்றிலும் பார்த்தான் வெடெல். அவன் முகம் இறுக்கமாகவும் அயர்ச்சியோடும் இருந்தது. என்ன நடக்கிறது என்ற குழப்பமும் வெறுப்பும் இழையோடியது. 'ஆனால் இங்கிருந்து சென்றாக வேண்டும். தங்குவதற்கு வீடு இருந்தாலும் தலைக்கு மேலே கூரை இருந்தாலும் இங்கே இருக்க முடியாது. மூன்றில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்த அதிகப்படியான தெரிவுதான் மனிதனைக் குழப்புகிறது. இரண்டில் ஒன்றைத் தவறாகத் தேர்ந்தெடுப்பதுதான் வாழ்க்கை என்பதை உணரத் தொடங்கும்போது மூன்றாவதாக ஒன்று வந்துசேர்கிறது. நீ வீட்டுக்குப் போ.'

சிறுவன் தலையை உயர்த்தி அவனைப் பார்த்தான். 'நாங்கள் வேலை செய்வோம். இப்போது நாம் வீட்டுக்குப் போகலாம். அப்பாவும் வேட்சும்… நாம் மலையிலிருந்து கீழே இறங்கலாம். இரண்டிரண்டு பேராகக் குதிரைகளில் சவாரி செய்யலாம். பள்ளத்தாக்கை அடைந்ததும் மேய்ஃபீல்டில் திருமணத்தை நடத்தலாம். நாங்கள் உங்களை அவமானப்படுத்த மாட்டோம்.'

'அவளுக்கென ஒருவன் இருக்கிறான் அல்லவா? ஒவ்வொரு ஞாயிறன்றும் தேவாலயத்தில் அவளுக்காகக் காத்திருந்து வீடு வரை துணை வரவும் இரவு உணவுக்கு அழைத்துச் செல்லவும் மற்ற இளைஞர்களிடம் சண்டையிடவும் ஒருவன் இருக்கிறான் அல்லவா?'

'எங்களை அழைத்துச் செல்ல மாட்டீர்கள், அப்படித்தானே?'

'இல்லை, நீ திரும்பிப் போ.'

சிறுவன் முகத்தைத் தாழ்த்தி, கடிவாளத்தைப் பிடித்தபடி, சிறிது நேரம் அங்கேயே நின்றிருந்தான். பிறகு சன்னமான குரலில், 'வாருங்கள், சீக்கிரமாகப் போக வேண்டும்,' என்றான்.

'பொறு, என்ன செய்யப் போகிறாய்?' என்றான் வெடெல்.

'உங்களோடு சமாதானமாகிவிட்டேன். வாருங்கள்.' குதிரையை இழுத்தபடி சாலையின்

ஓரத்துக்குச் சென்றான்.

'இரு, நீ வீட்டுக்குத் திரும்பிப் போ. போர் முடிந்துவிட்டது. வேட்ச்சுக்கும் அது தெரியும்.'

சிறுவன் பதில் பேசவில்லை. குதிரையைப் புதருக்குள் இட்டுச்சென்றான். உயர்ரகக் குதிரை இருந்த இடத்திலேயே நின்றது.

'ஏய், சீசர்!' என்றான் கறுப்பினத்தவன். 'இருங்கள், மாஸ்டர் சோஷே. நான் அங்கே வரப்போவதில்லை.... இல்லை...'

சிறுவன் நிற்காமல் திரும்பிப் பார்த்துச் சொன்னான். 'நீ அங்கேயே இரு. இருக்கும் இடத்திலேயே இரு.'

மெலிதான வடுவை போல இருந்தது பாதை. புதரைச் சுற்றிலும் வளைந்து நெளிந்து சென்றது. 'எனக்குத் தெரிகிறது. நீ திரும்பிப் போ,' என்றான் வெடெல்.

'நானும் வருகிறேன்,' என்று மிகவும் தாழ்வான குரலில் சொன்னான் சிறுவன். அவன் அமைதியாகப் பேசுவதைக் கவனித்தான் வெடெல். மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டு விறைப்பாகவும் அழுத்தத்தோடு கூடிய விழிப்புணர்வோடும் பேசுவதை உணர்ந்தான். மீண்டும் மூச்சை வெளியிட்டபோது குதிரை மெலிதாக அதிர்ந்தது.

'என்ன முட்டாள்தனம்! இன்னும் ஐந்து நிமிடத்தில் என்னையும் ஓர் இந்தியனைப் போல நடந்துகொள்ளச் செய்வான். அச்சத்தை உணரும் ஆற்றலை மீண்டும் பெறவேண்டும் என்று நினைத்தேன். ஆனால் எதிர்பார்த்ததுக்கும் மேலாக எல்லாம் நடந்துவிட்டது.' பாதை விரிந்தது. உயர்ரகக் குதிரை பக்கவாட்டில் வந்தது. இரண்டுக்கும் நடுவில் நடந்த சிறுவன் நிமிர்ந்து கறுப்பினத்தவனைப் பார்த்தான்.

'நீ பின்னால் வா என்று சொன்னேன் அல்லவா?' என்றான்.

'எதற்காகப் பின்னால் வரவேண்டும்?' கேட்டான் வெடெல். சிறுவனின் முகம் வெளுத்துப் போயிருந்ததைக் கவனித்தான். 'நானும் இந்தியனைப் போல நடந்துகொள்கிறேனா என்பது தெரியவில்லை' என நினைத்தான். பிறகு, 'அவன் ஏன் பின்னால் வரவேண்டும்?' என உரக்கக் கேட்டான்.

சிறுவன் வெடெல்லைப் பார்த்தான். குதிரையின் கடிவாளத்தை இழுத்துப் பிடித்து நிறுத்தினான். 'நாங்கள் எல்லா வேலையும் செய்வோம். உன்னை அவமானப்படுத்த மாட்டோம்,' என்றான்.

சிறுவனின் முகத்தைப் போலவே வெடெல்லின் முகமும் அமைதியாக இருந்தது. இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். 'தவறாக ஊகித்துவிட்டோமா? நாம் ஊகிக்க வேண்டியிருந்தது. மூன்றில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்ய வேண்டியிருந்தது.'

அவன் சொன்னது சிறுவனின் காதில் விழுந்தது போலவே தெரியவில்லை. 'அது நானில்லை என நம்புகிறாயா? சத்தியம் செய்து சொல்வாயா?'

'ஆம், சத்தியமாக.' சிறுவனைப் பார்த்தபடியே அமைதியாகச் சொன்னான் வெடெல். இருவரும் பேசுவதைப் பார்த்தால் இரண்டு வளர்ந்த ஆண்கள் அல்லது இரண்டு சின்னக் குழந்தைகள் பேசுவது போல இருந்தது. 'நாம் இப்போது என்ன செய்யவேண்டும்?'

'திரும்பிப் போகலாம். அவர்கள் இப்போது போயிருப்பார்கள். நாம்...' கடிவாளத்தைப் பிடித்து இழுத்தான். உயர்ரகக் குதிரை பக்கவாட்டில் தாண்டிச் சென்றது.

'இங்கே எங்காவது இருக்கும் என்கிறாயா?' என்றான் வெடெல். திடீரென குதிரையை வேகமாகச் செலுத்தினான். அதைப் பிடித்துக்கொண்டிருந்த சிறுவன் விசையால் உந்தி இழுக்கப்பட்டான். 'விடு,' என்றான் வெடெல்.

சிறுவன் கடிவாளத்தை விடாமல் பிடித்திருந்ததால் முன்னோக்கி இழுக்கப்பட்டான். இரண்டு குதிரைகளும் ஒன்றாக நடந்தன. உயர்ரகக் குதிரையில் குத்துக்காலிட்டு அமர்ந்திருந்த கறுப்பினத்தவன் இன்னமும் பேசிக்கொண்டிருந்தான். நடந்து நடந்து தேய்ந்துபோன காலணியைப் போல ஓயாமல் பேசிப் பேசி அவன் வாய் நைந்து தொங்கிப்போனது போலத் தோற்றமளித்தது.

'அவனிடம் நான் சொல்லி மாளவில்லை,' என்றான் கறுப்பினத்தவன்.

'கையை எடு,' என்றபடியே குதிரையை வேகமாகச் செலுத்தினான் வெடெல். சிறுவனின் தோளில் குதிரை இடித்தது. 'கையை எடு!'

'திரும்பி வரமாட்டாயா?' என்றான் சிறுவன். 'வரமாட்டாயா?'

'கையை எடு!' என்ற வெடெல்லின் பல் மீசைக்குக் கீழே தெரிந்தது. காலணியால் குதிரையை உந்தி மேலெழும்பச் செய்தான். கடிவாளத்தை விடுவித்த சிறுவன் உயர்ரகக் குதிரையின் கழுத்துக்குக் கீழே வேகமாக ஒளிந்துகொண்டான். தன் குதிரை முன்னால் தாவும்போது பின்னால் திரும்பிய வெடெல் உயர்ரகக் குதிரையின் முதுகில் சிறுவன் ஏறுவதையும் அதில் அமர்ந்திருந்த கறுப்பினத்தவனைக் கீழே தள்ளுவதையும் அவன் கீழே உருண்டு மறைந்துபோவதையும் கவனித்தான்.

'நல்ல குதிரையை நீ ஓட்டிவருவாய் என்று எண்ணினார்கள்,' என்று மூச்சிரைத்தபடியே சன்னமான குரலில் சொன்னான் சிறுவன். 'நீ மலையில் இருந்து கீழே போகும் பாதையில் செல்வாய் என்று சொல்லி இருந்தேன்!' உயர்ரகக் குதிரை அவனை வேகமாகத் தாண்டிச் சென்றது. 'குதிரை தப்பித்துவிடும். பாதையில் இருந்து விலகு. அதில் இருந்து விலகு...' வெடெல் தன் குதிரையை வேகமாகச் செலுத்தினான். இரண்டு குதிரைகளும் ஒன்றாகப் பயணம் செய்து பாதை இரண்டாக மடிந்து லாரல் மரங்களும் ரோடோடென்ரன் புதர்களும் அடர்த்தியாக வளர்ந்திருந்த பகுதிக்குள் சென்றன. சிறுவன் திரும்பிப் பார்த்தான்.

'பின்னாலேயே இரு. பாதையை விட்டு விலகு!' என்று கத்தினான். வெடெல் குதிரையை உந்தினான். எரிச்சலும் கோபமும் மெல்லிய திரையாக அவன் முகத்தில் படர்ந்ததைப் பார்க்கையில் புன்னகைப்பது போல இருந்தது.

உயிரற்ற அவன் முகம் நிலத்தில் மோதிய போதும் அந்தப் புன்னகை அப்படியே இருந்தது. அவன் கால் இன்னமும் குதிரையின் அங்கவடியில் சிக்கி இருந்தது. ஓசை கேட்டு தாவிக் குதித்த குதிரை வெடெல்லைப் பாதையின் ஓரத்துக்கு இழுத்துச் சென்றது. அங்கே நின்றபடி ஒரு சுற்றுச் சுற்றி மூச்சை வேகமாக வெளியிட்டு புல் மேயத் தொடங்கியது. உயர்ரகக் குதிரையோ வளைவை நோக்கி ஓடி அதைச் சுற்றிவிட்டு வந்த வழியே திரும்பியது. போர்வை வயிற்றுப் புறத்தில் சுருண்டிருந்தது. அது கண்களை உருட்டியபடி பாதையில் கிடந்த சிறுவனின் உடலைத் தாண்டிக் குதித்ததைப் பார்ப்பதற்குப் பாவாடையை உயர்த்திப் பிடித்தபடி தேங்கி நிற்கும் தண்ணீரைத் தாண்டும் பெண்ணொருத்தியைப் போல இருந்தது. சிறுவனின் முகம் பக்கவாட்டில் திரும்பி பாறையில் இடித்திருந்தது. கைகள் பின்புறமாகத் திரும்பி உள்ளங்கைகள் விரிந்து கிடந்தன. பிறகு இன்னும் ஒரு சுற்று சுற்றி வெடெலின் உடலுக்கு மேலே நின்றது. கனைத்தபடியே தலையை ஆட்டியது. தூரத்தில் தெரிந்த லாரல் மரத் தோப்பையும் காற்றில் கலந்து மறையும் வெடிமருந்தின் கரும்புகையையும் பார்த்தது.

அந்த இருவரும் தோப்பில் இருந்து வெளியே வரும்போது கறுப்பினத்தவன் தவழ்ந்துகொண்டு இருந்தான். இருவரில் ஒருவன் முன்னால் ஓடி வந்தான். அழுகையை நிறுத்தாமல் தன்னைத் தாண்டிச் செல்வதைப் பார்த்தான் கறுப்பினத்தவன். 'முழு முட்டாள்! முழு முட்டாள்! முழு முட்டாள்!' என்றபடியே கையில் இருந்த துப்பாக்கியைக் கீழே போட்டுவிட்டுத் தரையில் உட்கார்ந்தான். அசையாமல் கல் போல உட்கார்ந்து சிறுவனின் உடலை அதிர்ச்சியோடு பார்த்தான். கனவில் நடப்பதைப் பார்ப்பவன் போலத் தோன்றினான்.

இன்னொருவனைப் பார்த்தான் கறுப்பினத்தவன். ஒரு நொடி நிதானித்து நின்றபடியே துப்பாக்கியைத் தூக்கிப் பிடித்து அதற்குள் ரவைகளைப் போட்டான். கறுப்பினத்தவன் அசையவில்லை. தரையில் முட்டி போட்ட நிலையில் இருந்தபடியே அந்த இரண்டு வெள்ளைக்காரர்களின் செயல்களையும் கவனித்தான். அவனுடைய கண்கள் சிவந்திருந்தன, கருவிழிகள் அப்படியும் இப்படியும் வேகமாகச் சுழன்றன.

முட்டி போட்டபடியே நகர்ந்து குதிரையின் கீழே கிடந்த வெடெலின் அருகே சென்றான். வெடெல்லின் பக்கத்தில் மண்டிபோட்டபடி உட்கார்ந்திருந்தபோது இரண்டாமவன் துப்பாக்கியோடு மெல்ல பின்னால் நகர்வதைக் கவனித்தான். அவன் அசையாமல் நிற்பதைப் பார்த்தும் கண்களை மூடவில்லை, வேறு பக்கம் பார்க்கவில்லை. துப்பாக்கியின் குழல் மேலே உயர்ந்து கீழே இறங்கி வேட்சின் வெள்ளை முகத்தில் வெள்ளைத் தாளில் வைத்த கரும்புள்ளியைப் போல மாறியதைக் கவனித்தான். மண்டியிட்ட நிலையில் இருந்த கறுப்பினத்தவனின் சிவந்த கண்கள் வேக வேகமாகச் சுழன்று பிறகு அசையாமல் நின்றன, பிடிபட்ட விலங்கின் கண்களைப் போல.

(முற்றும்)

# கேன்ஸ் திரைப்பட விழாவில் ரஹ்மான், நயன்தாரா, மாதவனுக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு



பன்னாட்டுத் திரைப்பட விழாவான கேன்ஸ் திரைப்பட விழாவில் இந்தாண்டு தமிழ்த் திரைப்பிரபலங்கள் ஏ.ஆர்.ரஹ்மான், நயன்தாரா, மாதவன், தமன்னா ஆகியோருக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் பிரான்ஸ் நாட்டில் நடைபெறும் கேன்ஸ் திரைப்பட விழாவிற்கென்று திரை ரசிகர்கள் மத்தியில் ஒரு தனி மரியாதை உண்டு. இந்த திரைப்பட விழாவில் கலந்து கொள்வதும், தங்களின் படம் அந்த திரைப்பட விழாவில் திரையிடப்படுவதும் சர்வதேச திரைக் கலைஞர்களின் கனவாக இருந்து வருகிறது. அந்த வகையில் இந்தாண்டு நடைபெற இருக்கிற கேன்ஸ் திரைப்பட விழா தமிழ்த் திரைப்பட ரசிகர்களுக்கு பெரும் ரசனைக்குரிய விருந்தாக அமைய இருக்கிறது.

இந்தாண்டு 75ஆவது கேன்ஸ் திரைப்பட விழா வைகாசி 17ஆம் நாள் தொடங்க இருக்கிறது. அந்த விழாவில் இந்திய திரைத்துறையைச் சேர்ந்த முக்கிய நட்சத்திரங்கள் குழு ஒன்று பங்கேற்க உள்ளது. இதில், பாலிவுட் நடிகர் மற்றும் தயாரிப்பாளர் அக்சய் குமார், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான், கிராமப்புற இசையமைப்பாளர் மற்றும் பாடகர் மாமே கான், பாலிவுட் நடிகர் நவாஸுதீன் சித்திக், நடிகைகள் நயன்தாரா, பூஜா ஹெக்டே, தமன்னா, வாணி திரிபாதி திரைப்பட தணிக்கை வாரியத் தலைவர் பிரசூன் ஜோஷி, நடிகர் மாதவன், இசையமைப்பாளர் ரிக்கி கேஜ், திரைப்பட தயாரிப்பாளர் சேகர் கபூர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இந்தக் குழு இந்திய மத்திய தகவல் ஒலிப்பரப்புத்துறை அமைச்சர் அனுராக் தாகூர் தலைமையில் கேன்ஸ் திரைப்பட விழாவில் கலந்துகொள்ள இருக்கிறது. அப்போது, இந்தியக் குழுவிற்கு கேன்ஸ் திரைப்பட விழாவில் சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட உள்ளது. அதேபோல மாதவன் நடித்துள்ள ராக்கெட்ரி திரைப்படம் கேன்ஸ் திரைப்பட விழாவில் திரையிடப்பட இருக்கிறது.

# தோள் வலி குணமாகுமா?



**கணேசன்**

மூட்டு வலிகளில் முக்கியமானது, தோள் வலி. எந்த அடியும் படாமலேயே, தோள் பகுதியில் வலி வருவதுதான் பலருக்கும் புரியாத புதிர். பொதுவாக, 40 வயதைக் கடந்தவர்களுக்கு ஏற்படும் கடுமையான அவதி இது. கையைத் தூக்கினால் வலிக்கும். ஒரு பக்கமாகப் படுத்தால் வலி அதிகரிக்கும். இரவில் கை முழுவதிலும் குடைச்சல் அதிகமாகும். கையை அசைக்காமல் இருந்துவிட்டு மறுபடியும் அசைத் தால் வலிக்கும். கையைக் கழற்றி வைத்துவிட்டால் நல்லது என்று எண்ணத் தோன்றும் அளவுக்கு வலி வாட்டி எடுக்கும்.

### என்ன காரணம்?

தோள் மூட்டில் வலி வருவதற்குப் பல காரணங்கள் உண்டு. முக்கியக் காரணம் தோள் மூட்டை இணைக்கும் தசைகள், முதுகு மற்றும் கழுத்துப் பகுதியிலிருந்து கிளம்பி, குகை போன்ற ஓர் அமைப்புக்குள் வந்து சேருகின்றன. அந்த இணைப்புப் பகுதியில் குருதி குறையும் போது வலி உண்டாகிறது.

அதிக உடலுழைப்பு காரணமாகவோ அதிக எடை தூக்குவதாலோ தோள் மூட்டுத் தசைகள் பிசகிக்கொள்வது அடுத்ததொரு முக்கியக் காரணம். விபத்து, விளையாட்டு, அடிபடுதல் போன்ற வற்றால் மூட்டில் காயங்கள் ஏற்படுவதும் தசைக் கொத்து நைந்துபோவதும் அங்குள்ள சவ்வு கிழிந்துவிடுவதும் அடுத்த காரணங்கள்.

ஏதேனும் தொற்று உண்டாகி மூட்டில் அழற்சி தோன்றினாலும் தோள் வலி ஏற்படும். நீண்ட நேரம் ஒரே நிலையில் கழுத்தை வைத்திருந்தாலும் – உதாரணம்: கணினி வேலை செய்பவர்கள், தையல் வேலை செய்பவர்கள் – கழுத்து வலியோடு தோளிலும் வலி ஏற்படும். கரடு முரடான சாலைகளில் நெடுந்தூரம் வாகனம் ஓட்டுபவர்களுக்குத் தோள் மூட்டின் இணைப்புத் தசைநாண்கள் தொய்வடைவதால் தோளில் வலி ஏற்படுவது உண்டு. மூட்டழற்சி நோய்கள் காரணமாகவும் மூட்டு நழுவுதல் பிரச்சினை இருந்தாலும் தோளில் கடுமையாக வலிக்கும்.

அடுத்து, தோள்பட்டை மற்றும் புஜ எலும்பு முனைகள் தேய்ந்து கரடுமுரடாகலாம். அவை பிற பகுதிகளுடன் உராய்ந்து வலியை ஏற்படுத்தலாம். பொதுவாக, இந்த இணைப்புப் பகுதியில் 'பர்ஸா' (BURSA) என்னும் ஒரு குஷன் போன்ற குழிப்பை இருக்கிறது. அது இந்த உராய்வைத் தடுக்கிறது. ஆனால், அந்தக் குஷனிலேயே பாதிப்பு ஏற்பட்டால் வலி தாங்கமுடியாததாகிவிடும். தோள் மூட்டுத் தசைநாண்களில் கால்சிய படிவங்கள் சேருவதாலும் இப்படி வலி ஏற்படுகிறது. பித்தப்பைப் பிரச்சினைகள் இருந்தால் வலது தோளில் வலி தோன்றும்.

**அதிக உடலுழைப்பு காரணமாகவோ அதிக எடை தூக்குவதாலோ தோள் மூட்டுத் தசைகள் பிசகிக்கொள்வது அடுத்ததொரு முக்கியக் காரணம். விபத்து, விளையாட்டு, அடிபடுதல் போன்ற வற்றால் மூட்டில் காயங்கள் ஏற்படுவதும் தசைக் கொத்து நைந்துபோவதும் அங்குள்ள சவ்வு கிழிந்துவிடுவதும் அடுத்த காரணங்கள்**

கழுத்து எலும்புகளில் பாதிப்பு உண்டாகும் போது அந்த வழியாகத் தோளுக்கு வந்துசேரும் நரம்புகள் அழுத்தப்படுமானால், தோளில் வலி வரும். மாரடைப்பின்போது இடது தோளில் வலி ஏற்படும். மூட்டு அசைவுக்குத் துணை செய்யும் நான்கு தசைநாண்களும் (ROTATOR CUFF) பாதிப்படைந்தால், வலியால் தோளை அசைக்காமல் வைத்திருந்தால், நீரிழிவைக் கட்டுப்படுத்தாவிட்டால் தோள் மூட்டுத் தசைகள் இறுகிவிடும் (FROZEN SHOULDER). அப்போது தோளைச் சிறிதுகூட அசைக்க முடியாத அளவுக்கு வலி கடுமையாகும்.

### எது மாரடைப்பு, எது தோள் வலி?

சரி, இடது தோளில் வலி வந்தால் அது மாரடைப்பு வலியா, தோள் வலியா என்பதை எப்படித் தெரிந்துகொள்வது?

தோளைப் பல்வேறு திசைகளில் அசைத்துப் பாருங்கள். அந்த வலி அதிகமானாலோ, குறைந்தாலோ, தோளை இறுக்கிப் பிடித்த உணர்வு தளர்ந்தாலோ அது தோள் மூட்டு கொடுத்த வலியாகவே இருக்கும். தோளின் அசைவுக்கும் வலிக்கும் தொடர்பில்லை. அசைவு இல்லாத நேரத்திலும் வலிக்கிறது. வலி தொடர்ந்து இருக்கிறது என்பது உறுதியானால், அடுத்த அறிகுறிகளைக் கவனிக்கவேண்டும். இடது பக்கத் தோளில் மட்டும் வலி அதிகம். இடது கைக்கும் விரல்களுக்கும் வலி பரவுகிறது. உடல் வியர்க்கிறது. படபடப்பாக இருக்கிறது என்றால், அது மாரடைப்பு வலியாக இருக்க அதிக வாய்ப்பிருக்கிறது. உடனே மருத்துவரைப் பார்க்க வேண்டும்.

### கழுத்துப் பிரச்சினைதான் தோள் வலிக்குக் காரணமா?

இருக்கலாம். கழுத்தில் தொடங்கும் வலி தோள் வழியாக கைக்கு இறங்கினால், மின்சாரம் பாய்வதுபோன்ற வலி தோன்றினால், விரல்களில் மரத்துப்போதல், எரிச்சல் இப்படியான அறிகுறிகள் காணப்பட்டால் கழுத்தில் உள்ள பிரச்சினையால் தோளில் வலி வருகிறது எனத் தெரிந்துகொள்ளலாம்.

### தோள் வலிக்கு என்னென்ன பரிசோதனைகள்?

எக்ஸ்-ரேயில் எலும்பு தொடர்பான பிரச்சினைகள் தெரியும். சி.டி. ஸ்கேன், எம்.ஆர்.ஐ. ஸ்கேன் ஆகியவற்றில் மூட்டைச் சுற்றியுள்ள தசைநாண்கள், மெல்லிய சவ்வுகள் உள்ளிட்ட மற்ற பகுதி பிரச்சினைகளையும் அறியலாம். தோள் வலிக்கு நரம்பு பிரச்சினைதான் காரணமா என்பதை அறிய நரம்புக் கடத்தல் பரிசோதனை (NERVE CONDUCTION STUDY) உதவும். இ.சி.ஜி. / 'ட்ரெட் மில்' பரிசோதனையும் தேவைப்படும்.

### சிகிச்சை முறைகள் என்னென்ன?

தோள் வலி தொடக்கநிலையில் இருந்தால், வலி நிவாரணிகளும் களிம்புகளும் பரிந்துரை செய்யப்படும். தசை இறுக்கத்தைத் தளர்த்தும் மருந்துகளும், தூக்கம் கொடுக்கும் மருந்துகளும் தேவைக்கேற்ப தரப்படும். இயன்முறை சிகிச்சை (PHYSIOTHERAPY) நல்ல நிவாரணம் தரும். வலி அடுத்த கட்டத்துக்குச் செல்லும்போது, ஸ்டீராய்டு ஊசிகளை தோள் மூட்டுக்குள் செலுத்துவதும் உண்டு.

இவற்றுக்கெல்லாம் வலி குறையவில்லை என்றால், அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படும். தோளில் சில துளைகள் இட்டு ஆர்த்ராஸ்கோப்



# 58

ஐயங்கொண்டான் சுவாமிகள்

# எமையறிதல்

பெறுதிகளை வகைப்படுத்துவது சாத்தியமாகுமா? பயன் எதிர் பயனின்மை எனும் முரணும்கூட ஒரு மாயச்சந்தியேதான். எனக்கான தேவையை நிறைவுசெய்தது எனக்குப் பயனுடையது. அதுவே உனக்கு உனது தேவையை அதிகப்படுத்தியோ உதாசீனப்படுத்தியோ இருக்கலாம். அது உனக்கு பயனற்றதாக இருந்திருக்கும். இவ்வாறாக ஒரு செயலினது பெறுதி அமைந்திருக்கும் நிலையில் நானே செய்தேன், என்னாலேயே இயலும் போன்ற உரிமை கோருதல்களை என்னவென்று சொல்வது?

இவ்வாறாக உரிமை கோரி சுயபெருமை கொண்டாலும் மனத்தினுள்ளாக ஒரு மூலையிலாவது ஒரு உறுத்தல் (சிந்திக்க முடிந்த ஒருவனாயிருப்பின் அதிகம்) இருந்துகொண்டேயிருக்கும். அவ்வுறுத்தல் மன அமைதியைச் சந்தடியின்றி பறித்துக்கொண்டேயிருக்கும். எனக்கான பெயரைப் பறித்துவிடக்கூடிய ஒருவன் வந்துவிடுவான், என்னைவிட அதிகமாகச் செய்துவிடுவான் போன்ற அச்சம் எழுவது தவிர்க்கக்கூடியதல்ல.

இவ்வாறான அச்சம் பீடித்துக்கொண்ட ஒருவன் பிறர் மீதும் அவர்களது செயற்பாடுகள் மீதும் அதீத கவனத்தை வைத்திருக்கவேண்டிய நிலை தன்னாலேயே எழுந்துகொள்கிறது. பிறரையே பார்த்துக் கொண்டிருப்பதன் விளைவாக தனது இயல்புநிலையைத் தொலைத்துவிடுகின்ற அவலம் தவிர்க்க முடியாதபடி எழுந்துகொள்கிறது. தனதான வழக்கமான செயற்பாடுகளைத் தொலைத்துவிட்டு தூங்கமுடியுமா?

இதுதவிர அவர்களது செயற்பாடுகளைக் குழப்பமுனைதல் என்பதற்கான பிரயத்தனம் நேரத்தையும் உழைப்பையும் விழுங்கிவிடுகிறது. சம்மந்தப்பட்டவர்களது பெயரை களங்கமுறுத்தும் விதமான கருத்துக்களைப் பரப்பவும் முயலவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு அதற்காகவும் தனது நேரத்தை இழந்துவிடுகிற அவலமும் நடந்துவிடுகிறது. பிறர் மீதான பொறாமை என்பது தோன்றியவுடனேயே மேற்சொன்னவை தன்னையறியாமலேயே தொடங்கிவிடுகிறது.

இந்நிலையினது உச்சமாக தன்னைப்பற்றிய பெருமையடித்தல் தவிர்க்க முடியாததாகிறது. தற்பெருமை பேசுதல், அதற்கூடாகப் பிறரைக் கவர்ந்து வைத்திருத்தல் என்பன நிலையற்றவை என்பதுடன் குறித்தவர் பற்றிய எதிர்மறையான எண்ணத்தையே தோற்றுவித்துக்கொள்கிறது. தான் கூறியவற்றைப் பிறர் ஏற்கிறார்களா என்பதைவிட நம்புகிறார்களா என்பதே பேருருக்கொண்டு முன்நின்று கூத்திடத் தொடங்குகிறது.

நானே என்னால் மட்டுமே என்கிற இந்த நிலை வேறு. இதை வேண்டுமாயின் அகங்காரம் அல்லது ஆணவம் என்கிற வகைக்குள் அடக்கிவிடமுடியும். ஆனால் ஏற்கனவே ஓரிருமுறை பேசியதுபோல் நான் என்கிற ஒன்று தவிர்க்கவே முடியாதது என்பதும் கவனத்திலிருப்பது அவசியம். நான் எனுமொரு மையப்புள்ளி கட்டாயமானது. நான் மட்டுமேதான் என்பதல்ல. என்னால் மட்டுமேதான் என்பதுமல்ல. இவ்விடத்தில் நான் என்பதினது அழுத்தத்தைத் தீர்மானிக்கிற பக்குவம் முக்கியமானது.

அவ்விதமான பக்குவ நிலையானது சமூக நேசிப்பு, சமூகத்துடனான ஊடாட்டம், அதன்வழி பெற்றுக்கொண்ட பட்டறிவைச் சார்ந்ததாயே அமைந்திருக்கும். நான் என்பதனதும் எனது என்பதனதும் பெறுமதி என்ன? என்பதை அச்சமூகம்சார் பயனுடைய பெறுதிதான் திர்மானிக்கிறது. சமூகத்துக்கான தேவைதான் என்னால் ஆற்றப்பட்ட வேலையினது பெறுதியா? கடலோக் கிராமத்து மக்களுக்கு உழவுகலப்பையை வழங்கிவிட்டுப் பெருமைப்படலாமா?

பெயரைத் தேடுதல் என்பதுகூட ஒரு தொழிலாக மாறிவிட்டதோ என்கிற ஒரு நிலையில் யாருக்குத்தான் மன அமைதி என்பது கிட்டிவிடும் என்று எதிர்பார்க்கலாம். பெயரை அடைதல் ஒரு சடங்குவழிப்பட்ட ஒன்றல்லஎன்பதை உணர்ந்தால் ஏற்றுக்கொண்டால் யாருக்கும் பிரச்சினையில்லை. பெயரை எதிர்பார்த்துச் செய்வது ஒரு செயலுக்கு அழகல்ல. பெயர் செய்த வேலையினது நிலைபேறான பெறுதியால் சுட்டப்படவேண்டும்.

நற்பெயரைப் பெறவேண்டும் என்பதுகூட ஒரு ஆசைதான். தேவை எதிர் ஆசை பற்றிப் பேசியிருக்கிறோம். ஆசையில்லை என்பது பொய் என்று பேசியிருக்கிறோம். ஆசை என்கிற ஒன்று இல்லையெனில் வாழ்வானது உப்புச்சப்பற்றதாகிவிடும் என்பது உண்மை. எதற்கு ஆசைப்படுவது? சிந்திப்போம்.

---

## தோள் வலி . . .

கருவி கொண்டு கரடுமுரடாகிப்போன குருத்தெலும்பைச் சீர்படுத்துகிறார்கள்; நைந்துபோன தசைக்கொத்தைச் சரிப்படுத்துகிறார்கள்; கிழிந்த சவ்வை இணைக்கிறார்கள்; கால்சியம் படிமங்களை அகற்றுகிறார்கள்; தோள் மூட்டைச் சுத்தப்படுத்து கிறார்கள். இவற்றில் தோள் வலி நிரந்தரமாகக் குணமாகிறது.

**தோள் மூட்டு வலிக்கு வீட்டு சிகிச்சைகள் உண்டா?**

உண்டு. பாதிப்பின் தொடக்கக் கட்டத்தில் வலி உள்ள பகுதியில் வெந்நீர் ஒத்தடம் ஒரு நிமிடம் ஐஸ் ஒத்தடம் ஒரு நிமிடம் என மாற்றி மாற்றிக் கொடுக்கலாம். இப்படிக் காலையிலும் இரவிலும் தலா 20 நிமிடங்களுக்கு இரண்டு வாரங்களுக்குத் தொடர்ந்து கொடுத்தால் தோள் வலி குறையும். தோளுக்கு ஓய்வு கொடுப்பதும் நல்லது. கையை மேலே தூக்கிச் செய்யும் வேலைகளையும், கைகளைப் பின்புறம் கொண்டு சென்று செய்யும் வேலைகளையும் குறைத்துக் கொள்ளவேண்டும். தோள் மூட்டைப் பின்னுக் குக் கொண்டு செல்லும் பயிற்சிகள், பெண்டுலம் போல் முன்னும் பின்னும் ஆட்டும் பயிற்சிகள், கைகளைப் பக்கவாட்டில் கொண்டு செல்லும் பயிற்சிகள் போன்ற எளிய பயிற்சிகளை அடிக்கடி செய்யலாம்.



**தோள் வலியைத் தடுக்க முடியுமா?**

முடியும். தோளுக்கு வலு கொடுக்கும் மிக எளிய பயிற்சிகளைத் தினமும் செய்தால் அல்லது யோகா செய்தால் தோள் வலி வருவது தவிர்க்கப்படும். அதிக எடையுள்ள பொருள்களைத் தூக்குதல், தாங்குதல், தள்ளுதல் போன்ற வேலைகளைச் செய்யக்கூடாது. கணினி போன்ற வேலைகளில் ஈடுபடும்போது தொடர்ந்து வேலை செய்வதைக் குறைத்துக்கொண்டு அவ்வப்போது ஓய்வு எடுத்துக்கொள்ளவேண்டும். வீட்டைச் சுத்தம் செய்வது, பந்து வீசி விளையாடுவது, தோளில் சுமை தூக்குவது... இப்படி அடிக்கடி செய்யும் வேலைகளை அளவோடு வைத்துக்கொள்ள வேண்டும். சரியில்லாத பாதைகளிலும் சாலைகளிலும் இருசக்கர வாகனங்களில் அதிக தூரம் பயணம் செய்வதைத் தவிர்க்க வேண்டும். நீரிழிவைக் கட்டுப்படுத்த வேண்டும்.

# இருண்ட தேசத்துக்குள் புகுந்தது வைரஸ்...!



தர்மினி

இரவாகியதும் மின் ஒளிகளை அணைத்துவிட்டு இருளுக்குள் மூழ்கி விடுவது, தனது அயல்நாடுகளுடன் எவ்வித தொடர்புகளையும் பேணாமல் தனித்திருப்பது, வெளித்தேசங்களுடன் கொடுக்கல் - வாங்கல் என எவ்வித வர்த்தகத் தொடர்புகளையும் பேணாமல் தானே உற்பத்தி செய்து தானே பயன் பெற்று வருவது என்று தன்னையொரு இருண்ட தேசமாக்கிக்கொண்டுள்ளது வடகொரியா. அத்தகு வடகொரியா இப்போது முதல் முறையாக உள்ளக முடக்கத்துக்கு உள்ளாகியிருக்கிறது. இதுவரை காலமும் உலக நாடுகளுடன் ஒட்டாது தனிமைப்படுத்தலில் இருந்த வடகொரியாவுக்குள் இப்போதுதான் கொவிட் 19 தீநுண்மி நுழைந்திருக்கிறது என்று தெரியவருகிறது. இந்தத் தகவல் முழு உலகையும் ஆச்சரியப்படுத்தியிருக்கிறது.

**வடகொரியா முடங்கிப்போவது என்பது உலகுக்குப் புதிய தகவல் அல்ல ஆனாலும் இந்த முடக்கத்தைப் பலரும் அதிசயக் கண்கொண்டுதான் பார்க்கிறார்கள். அதற்குக் காரணம் வடகொரியாவின் தனிமையும் தனித்த திறனுமே.**

**வடகொரியாவின் பலம்**

ஒரு சிறிய - குட்டி நாடான வடகொரியா உலகின் படைப் பலத்தில் உலகின் மிகப் பெரிய நாடுகளுக்கு அடுத்து 4ஆம், 5ஆம் இடத்தில் இருக்கிறது. படை பலத்தில் மட்டுமல்ல அணு ஆயுத பலத்திலும் வடகொரியா முன்னணியில் தான் இருக்கிறது. உலக நாடுகளை அச்சுறுத்தி அடிமைப்படுத்தி வரும் அமெரிக்காவுக்கே சிம்மசொப்பனமாகத் திகழ்வது வடகொரியா. கிம் ஜோங் உன் என்கிற இளம் தலைவர் ஆளும் தேசமான வடகொரியா இப்போது முடங்கிப் போயுள்ளது.



வடகொரியா முடங்கிப்போவது என்பது உலகுக்குப் புதிய தகவல் அல்ல ஆனாலும் இந்த முடக்கத்தைப் பலரும் அதிசயக் கண்கொண்டுதான் பார்க்கிறார்கள். அதற்குக் காரணம் வடகொரியாவின் தனிமையும் தனித்த திறனுமே. கொரியத் தீபகற்பப் பிரச்சினையுடன் தென்கொரியாவுடன் மாத்திரமன்றிச் சீனாவுடனும் அது கொண்டிருக்கின்ற தொடர்புகள் மட்டுப்பட்டவையே. மற்றைய நாடுகளில் சார்ந்திருக்காமல் தனியாக இருப்பதும் தனியாக முடிவுகளைத் திடுதிப்பென எடுத்து அதை நடைமுறைக்கிடுவதும் வடகொரியாவின் தனித்தன்மை.

இரவானால் வடகொரியாவை நோட்டமிட முடியாது என்று சொல்லப்படுவதன் காரணம் இரவானால் மின் ஒளிகளை அணைத்து இருளுக்குள் அது மூழ்கி விடுவதாலேயே. வடகொரியாவின் உள்நாட்டு விடயங்களை உலக நாடுகள் அறிய முடியாத அளவுக்குத் தன்னுடைய உட்கட்டுமானத்தைப் பேணி வருகிறது அது. இணைய, சமூக வலைத்தள, ஊடக மற்றும் தொலைத்தொடர்பு வசதிகள் அதிகரித்துவிட்ட 22ஆம் நூற்றாண்டிலும் வடகொரியா குறித்த எவ்வித தகவல்களும் வடகொரியாவே சொன்னாலன்றி வெளியாருக்குத் தெரியாது என்பது வடகொரியாவின் எவ்வளவு பெரிய பலம்...?

**கொவிட் 19இன் நுழைவு**

வடகொரியாவின் உள்நாட்டு விடயங்கள், அந்த நாட்டின் சட்டதிட்டங்கள், பொருளாதாரம், மக்களின் வாழ்க்கை முறை என எந்த விவகாரம் என்றாலும் அது குறித்த தகவல்கள் - விவரங்கள் கிடைப்பது என்பது வெளியுலகுக்குக் கடினமாகவே இருக்கிறது. வடகொரியாவின் தலைவர் கிம் ஜோங் உன் என்ன செய்கிறார்? எங்கிருக்கிறார்? இருக்கிறாரா இல்லையா? என்பதையெல்லாம் அறிவதென்பது அமெரிக்காவுக்கும் ஏனைய

# நம்மவூர்ச் சுத்துமாத்து



திலீபன் - கன்னாதிட்டி

## எரிபொருள் வழங்குநர்களின் சுத்துமாத்து

நாட்டில் நிலவுகின்ற அசாதாரண நிலமையைப் பயன்படுத்தி வர்த்தகர்கள் பலரும் பல சுத்துமாத்துகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இது பொய்யல்ல. பொருள்களை அதிக விலைக்கு விற்கும் மற்றும் பதுக்கும் அத்தகைய வர்த்தகர்களைக் கண்டறிந்து குற்றப்பணம் அறவிடுவதற்கும் தண்டிப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை உரிய தரப்பினர் மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடவடிக்கைகள் வர்த்தகர்களைக் கட்டுப்படுத்தப் போதுமானவை அல்ல என்றாலும் குறிப்பிட்ட அளவில் அத்தகைய சுத்துமாத்துகளைக் கட்டுப்படுத்தவாவது முடிந்திருக்கிறது. ஆனால், இந்த இக்கட்டான சூழலிலோ உணவுப் பொருள்களுக்கான தட்டுப்பாடுகளைவிட எரிபொருள்களுக்கான தட்டுப்பாடே அதிகரித்துக் காணப்படுகிறது. எரிபொருளுக்கான விலைகள் அடிக்கடி எகிறிக்கொண்டிருப்பதும் அவற்றுக்கான தட்டுப்பாடும் மக்களை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முண்டியடிக்க வைத்திருக்கின்றது.

மண்ணெண்ணெய் மற்றும் பெற்றோல் ஆகியவற்றைப் பெறுகின்றவர்களே அதிகமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குவிகின்றனர். இதனால் மண்ணெண்ணெய்யைப் பங்கீட்டு அட்டைக்கும் "டோக்கன்" முறையிலும் நிரப்பு நிலையங்கள் வழங்குகின்றன. அத்தோடு எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அரசால் எரிபொருள்களை மட்டுப்படுத்தி வழங்கும் முறைகளும் அறிவிக்கப்பட்டன. அதன்படி மோட்டார் சைக்கிள்களுக்கு 2 ஆயிரம் ரூபாவுக்கும் முச்சக்கர வண்டிகளுக்கு 3 ஆயிரம் ரூபாவுக்கும் கார்களுக்கு 8 ஆயிரம் ரூபாவுக்கும் பெற்றோலை விநியோகிக்க வேண்டும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவிப்பு வெளியிட்டது. அரசியல்வாதி ஒருவரின் உறவினரது எரிபொருள் நிரப்பு நிலையம் என்று சொல்லப்படுகின்ற யாழ். நகரப் பகுதி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குச் சென்று பெற்றோலுக்கு வரிசையில் நின்றபோது பெரும் சுத்துமாத்துகள் நிகழ்வதைக் காண முடிந்தது.

கார்கள், முச்சக்கர வண்டிகள் ஒரு வரிசையிலும் மற்றொரு வரிசையில் மோட்டார் சைக்கிள்களும் பெற்றோல் பம்பியை நோக்கி வரிசையில் நின்றன. பெற்றோல் விநியோகிக்கப்பட்டுக்கொண்டிருந்தது. தேவையான அளவுக்குப் பெற்றோலை நிரப்பிக்கொண்டிருந்தனர். காரில் வந்தவர்கள் அதன் பின்பகுதியில் 50 லீற்றர் கொள்ளளவுள்ள கலன்களைக் கொண்டுவந்து காரின் கலனையும் நிரப்பித் தாம் கொண்டு வந்த கலனையும் நிரப்பிப் பெற்றோலை எடுத்துச் சென்றனர். முச்சக்கர வண்டிக்காரர்களும் அவ்வாறே செய்தனர். மோட்டார் சைக்கிள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளில் வந்தவர்களும் கலன்களில் அள்ளைகொள்ளையாகப் பெற்றோலை எடுத்துச் சென்றனர். இப்படியே நடந்துகொண்டிருக்கத் தமது வாடிக்கையாளர்கள் என்றுகூறிக் கார்க்காரர்கள் பலரை வரிசைக்கு மாறாக முன்னுரிமையளித்தும் பெற்றோல் நிரப்பியனுப்பினர். சிறிது நேரத்தில் கார்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் குறைந்துவிட்டன. இப்போது எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு உள்ளே கணக்குப் பார்த்துக்கொண்டிருந்த ஒருவர் வெளியே வந்து பெற்றோல் கிடங்கைத் திறந்து பார்த்து விட்டு "பெற்றோல் குறைந்து விட்டது ஆளுக்கு ஆயிரம் ரூபாவுக்கு அடியுங்கள்" என்றார். வரிசையில் காத்து நின்ற மோட்டார் சைக்கிள் ஓட்டி ஒருவர் முன்னே வந்து "கார்க்காரருக்கு 8 ஆயிரம் ரூபாவுக்குத்தான் அடிக்கச்சொல்லியிருக்கு நீங்கள் 26 ஆயிரம் ரூபாவுக்குக் காருக்கும் அவர் கொண்டுவந்த கலனுக்கயுமா அடிச்சு விடுறீங்கள். அப்பிடியெல்லாம் அடிச்சுப்போட்டு எங்களுக்கு ஆயிரம் ரூபாக்கு அடிக்கச் சொல்லுறீங்கள். எங்களுக்கு 2 ஆயிரம் ரூபாவுக்காவது அடியுங்கோ" என்றார். இதைக் கேட்ட அந்தப் பணியாளர் "ஒருத்தருக்கும் அடிக்கத்தேவையில்லை நிப்பாட்டுங்கோ. றூள்ஸ் கதைக்கினமாம் றூள்ஸ். எங்கையாவது போய் அடிக்கட்டும். நிப்பாட்டு பெற்றோலை" என்று பெற்றோல் பம்பியை இயக்கிக்கொண்டிருந்த ஊழியருக்குக் கட்டளையிட்டுவிட்டு உள்ளே போய் பெற்றோல் பம்பிக்கான மின் இணைப்பைத் துண்டித்தார்.

இவ்வாறான பிறழ்வான செயற்பாடே பல எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் நடக்கிறது. எல்லாம் காலம். என்றபடி அங்கு வரிசையில் நின்றவர்கள் கலைந்துசென்றனர். "இருக்கேக்க நாங்க கூட அடிக்கிறனாங்கதானே. பிறகேன் உப்பிடிக் கதைப்பான்" என்று அங்கு நின்ற ஊழியர் ஒருவர் தமது சுத்துமாத்தை மூடிமறைக்கும் விதமாகக் கதைத்தார். அதுபோல பல நியாயப்பாடுகளைத் தமது மூளையோட்டத்துக்கு ஏற்ப கதைத்துத் தமது சுத்துமாத்தை நியாயப்படுத்திக் கொண்டார்கள் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள். தங்களுடைய வாடிக்கையாளர்கள் என்கிற முன்னுரிமைக்காகவும், ஒதுக்கப்பட்ட அளவைவிடப் பெற்றோலை அதிகமமாகவும் விநியோகித்ததே தவறு. அதை உணரும் புத்தி அவர்களுக்கு இருக்கவில்லை. எவ்வளவு வாகனங்கள் நின்றாலும் ஒதுக்கப்பட்ட அளவில் பெற்றோலை விநியோகித்துவிட்டு அது முடிந்த பிற்பாடு நிறுத்திவிடுவதே முறையானது. ஆனால் அவ்வாறு செய்யவில்லை. வர்த்தக நிலையங்களுக்குள் புகுந்து பொருள்களின் விலை மற்றும் பதுக்கல்களைப் பரிசோதிப்பதைப்போல எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் சென்று பரிசோதிப்பதும் பெற்றோல் முடிந்து விட்டது என்று பொய் சொல்வதாக முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் உடன் விரைந்து பெற்றோல் கிடங்கைப் பார்வையிடுவதும் அவசியமானது. உரிய தரப்பினர் இதுவிடயத்தில் கவனம் செலுத்தாதுவிடின் இந்தப் பெற்றோல் பூதங்கள் இன்னும் பெரிதாகவே வாய்ப்புண்டு.

## இருண்ட ..

நாடுகளுக்கும் குதிரைக் கொம்பான விடயம். காற்றுக்கூட நுழைய முடியாத இருண்ட தேசம் என்று வடகொரியாவின் பலத்த பாதுகாப்பை வர்ணிக்கிறார்கள். அத்தகைய தேசத்துக்குள் இப்போது நுழைந்திருக்கிறது கொவிட் 19 தொற்று. உலகுக்கு அறிமுகமாகிப் பல உயிர்களைக் காவு வாங்கிப் பல திரிபுகளாக உருமாறியும்விட்ட நிலையில் இப்போதுதான் கொவிட் 19 தீநுண்மி வடகொரியாவுக்குள் நுழைந்திருக்கிறது என்று தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.



**உண்மையா? பொய்யா...?**

வடகொரியாவுக்குள் வைரஸ் புகுந்துவிட்டது என்கிற இந்தத் தகவல் உண்மையா? பொய்யா? என்று உறுதிப்படுத்த முடியாவிட்டாலும் தனது நாட்டுக்குள் எவ்வித கொவிட் தொற்று நோயாளர்களும் இனம்காணப்படவில்லை என்று இதுவரை காலமும் கூறிவந்த வடகொரியா, கொவிட் தொற்றுக்குள்ளாகிய முதல் நபரை அடையாளம் கண்டுள்ளதாகச் செய்தி வெளியிட்டு அதன் காரணமாக ஊரரடங்கு உத்தரவை உள்நாட்டில் நடைமுறைப்படுத்தியுமிருக்கிறது. இதுவரை காலமும் தமது நாட்டில் கொவிட் தொற்றாளர்கள் எவரும் இனம்காணப்படவில்லை என்று வெளிநாடுகளுக்கும் ஐ.நா. மற்றும் உலக சுகாதார நிறுவனத்துக்கும் சொல்லி வந்தபோதெல்லாம் வடகொரியாவை ஆச்சரியத்துடன் பார்த்தவர்கள் இப்போது மேலும் ஆச்சரியத்துடன் பார்க்கிறார்கள். காரணம் இந்தத் தகவல் உண்மை என்றால் - அதாவது வடகொரியா தனது முதல் வைரஸ் தொற்றாளரை அடையாளம் கண்டுள்ளதை அறிவித்திருப்பது உண்மையானால் வடகொரியாவுக்குள் வைரஸ் புகுவதற்கு இவ்வளவு காலம் எடுத்துள்ளது என்பதும் உண்மைதானே....? அது எப்படிச் சாத்தியமானது என்பதுதான் அந்த ஆச்சரியத்திற்குக் காரணம்.

## கண்டறியாத கதைகள்

**04**




யசோ மாமி

வணக்கம் மருமக்களே!
எல்லோரும் நலமாக இருக்கிறீர்களா?

கடந்த மாதம் உங்களிடம் ஏன் சிலநாடுகளில் நான்கு பருவ காலங்களும் சில நாடுகளில் இரண்டு பருவகாலங்களும் சில நாடுகள் அதிக வெப்பத்தையும் வேறுசில நாடுகள் அதிகளவு குளிரையும் கொண்டிருக்கின்றன என்று கேட்டிருந்தேன் அல்லவா?

அதற்கான விளக்கத்தை இன்றைக்கு நான் உங்களுக்குத் தரப்போகிறேன்.

நீங்கள் வாழும் இலங்கையில் இரண்டு பருவகாலங்களான மாரி, கோடை ஆகியனவும் நான் வாழும் அவுஸ்திரேலியாவில் சில பகுதியில் கோடை, குளிர், இலையுதிர், இளவேனில் காலங்களும் ஏற்படக் காரணம் நாங்கள் வாழும் பூமியின் அமைவிடம்தான்.


இந்தப் பிரபஞ்சத்தில் கோளவடிவமான பூமி தன்னையும் சுற்றிக் கொண்டு சூரியனையும் நீள்வட்டப் பாதையில் சுற்றிக்கொண்டிருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். அத்தோடு தன்னைத்தான் ஒருதரம் சுற்றி வர ஒருநாளும் சூரியனை ஒருதடவை சுற்றி முடிக்க ஒருவருடமும் ஆகிறது என்பது பற்றியும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். அத்தோடு சூரியன் படும்பகுதி வெளிச்சமுள்ள பகலாகவும் சூரியனின் கதிர்கள் படாமல் இருக்கும் எதிர்பகுதி இரவாகவும் இருக்கும் என்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

இதுவரை அதில் எல்லாம் ஒரு மாற்றமும் இல்லாமல் ஒருவித ஒழுங்கில் இந்த சுழற்சி நடந்து வருகிறதென்பதும், நாமெல்லாம் பூமியின் மேலிருந்து சுற்றிக்கொண்டிருக்கிறோம் என்பதும் மிக ஆச்சரியமான விடயங்கள் இல்லையா?

இந்த மாதிரி நாள்களும் வருடங்களும் கழியக் கழிய எங்களுக்கு வயதும் கூடிக்கொண்டு போகிறது என்பது ஒரு புறமிருக்க, பூமியின் பருவ நிலைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்ட வண்ணமாக இருக்கின்றன. ஒரு சூரியன், ஒருபூமி, இந்தச் சுழற்சி எல்லாம் ஒரு சீரான வேகத்தில் நடந்து கொண்டிருக்கும்போது ஏன் இலங்கையில் இரண்டு பருவ காலங்களும் சில நாடுகளில் நான்கு பருவகாலங்களும் வருகின்றன?

அதற்கு சில காரணங்கள் இருக்கின்றன.


பூமி மேற்கிலிருந்து கிழக்காக சுற்றுகிறது. அதனால் தான் கிழக்குப் பகுதியில் இருக்கிற நாடுகள் முதலில் சூரிய உதயத்தைக் காண்கின்றன. அதே நேரம் பூமி 23.5 பாகை சரிவாகவும் இருக்கிறது. இப்படி அது அமைந்திருப்பதனால் சூரியனுடைய கதிர்கள் சில இடங்களுக்கு மிக அதிகமாகவும் சில இடங்களில் அதிகம் படாமலும் இருக்கிறது. கீழே வரும் படம் அதனை உங்களுக்குத் தெளிவாகக் காட்டும்.




**சூரியனை பூமி சுற்றிவரும் பாதை**


அதனால்தான் சூரியன் அதிகமாகவும் நேரடியாகவும் படும் இடங்களில் கோடை, மாரி ஆகிய காலங்களும் அப்பகுதிக்கு அப்பால் பூமியின் வளைவுப் பகுதியில் அமைந்திருக்கிற நாடுகளில் சூரியனின் கதிர்கள் அதிகமாக படாத காரணத்தால் அந்த நாடுகளில் உள்ளவர்களால் நான்கு பருவங்களையும் தெளிவாக அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

அதனோடு கூடவே இந்தப் பூமியை புவியியலாளர்கள் வெப்பவலயம், (அயனமண்டலம்-TROPICAL ZONE) என்றும், அயல் அயன மண்டலம் (மிதவெப்ப மண்டலம்-TEMPERATURE ZONE) என்றும், வடமுனை தென்முனை என்றும் நான்காகப் பிரித்திருக்கிறார்கள்.




**பூமியும் சூரியனும் அமைந்துள்ள நிலை**

இந்தப் படத்தில் காட்டி இருக்கிறபடி சூரியன் நேரடியாகப் படுகிற வெப்பவலயப் பகுதிக்குள் இலங்கை வருவதால் அங்கு கோடை, மாரி என்று இரு பருவ காலங்களும், அவுஸ்திரேலியக் கண்டத்தின் ஒருபகுதி வெப்பவலயத்திற்குள்ளும் சிறுபகுதி அயல் அயனப் பகுதிக்குள்ளும்




**குளிர் பிரதேசமாக இருக்கும் வடதுருவமும் (வடஅரைக் கோளம்) தென்துருவமும் (தென்அரைக் கோளம்)**

வருவதால் இங்கு இரண்டு பருவகாலங்களும் வருகின்றன. இவ்வாறாக அயல் அயனப் பகுதிக்குள் இருப்பவர்களுக்கு நான்கு பருவகாலங்களையும் தெளிவாகக் கண்டறியக் கூடியதாக இருக்கிறது. சூரியனே படாத வடமுனையும் தென்முனையும் பனிப்பாறைகளாகக் குளிர்ந்து போயுள்ளன.

பூமியின் மையக்கோட்டை அடிப்படையாகக் கொண்டு புவியியலாளர்களால் சொல்லப்பட்டிருக்கிற அளவுகோலைக் கொண்டு பார்க்கும் போது உங்களுக்கு அது தெளிவாக விளங்கக்கூடும்.

அதிசயமான அமைப்பினையும் இயக்கத்தினையும் கொண்டிருக்கிற இந்தப் பூமியில் நீங்கள் ஓரிடத்திலும் நான் ஓரிடத்திலும் அமர்ந்து கொண்டு எங்களை அறியாமல் நாங்கள் பூமியின் மேலே பயணம் செய்துகொண்டிருக்கிறோம். இந்தப் பயணத்தில் நாள்களும் வருடங்களும் நகர்ந்துகொண்டிருக்கும் வேகத்திற்கேற்ப நமக்கும் வயது போய்க்கொண்டிருக்கிறது.

இந்தப் பூமியின் மேலே பயணக் களைப்பே தெரியாமல் நாங்கள் செய்கிற சவாரியும் அதில் நாங்கள் நகராமலே காண்கின்ற இரவு பகலும், மழை வெய்யிலும் , இயற்கைக் காட்சிகளும், மேலும் ஆறு, மலை, கடல், காடு, சமதரை போன்ற நிலக் காட்சிகளும், அங்கு தினம் காணும் பல வகையான உயிரினங்களும் கண்களுக்கும் கருத்துக்கும் ஆர்வமூட்டு பவையாக இருக்கிறதா?

உங்களுக்கு நீங்கள் வாழும் பிரதேசத்தில் ஆர்வமூட்டுவதாக இருப்பது என்ன என்று எனக்குச் சொல்வீர்களா? அதனை மறக்காமல் உடனடியாக எழுதி 0763982858 இந்த வட்ஸ்அப் எண்ணுக்கு படம் எடுத்து அனுப்பி வையுங்கள் பார்க்கலாம்...



அயல் அயன மண்டல நாடுகள்



அயன மண்டல நாடுகள்

# நடக்கட்டும் நல்லாய் நடக்கட்டும்!

**கதிரேசன் காத்தவராயன்**

அதிலை நாட்டுநடப்பை அறிவமெண்டு வாசிகசாலையடிக்குப் போனன். ஊரடங்குச் சட்டத்தைத் திடீரெண்டு போடாலென்ன முதலே சொல்லிவைச்சுத்தான் போட்டாலென்ன சனம் வழமைமாதிரித்தான் தங்கடைபாடு. பொலிஸ்காறரும் கொரோனாப் பூச்சிபிடிக்கிற சாட்டிலை சந்தியிலை நிக்கிற ஆமிக்காறரும்கூட போனிலை நோண்டிக் கொண்டு தங்கடைபாடு... வாசிகசாலையிலை கனகரும் தம்பரும் ஆளுக்கொரு பேப்பரோடை சோதினைக்குப் படிக்கிற பிள்ளை



யளைவிட கவனமாயிருந்தினம்.

"என்னப்பா சோதினைக்கோ படிக்கிறயள்? வலு கவனமாப் படிக்கிறியள்...?" எண்ட என்ரை குரல் கேட்டு நிமிந்தினம். "அட கதிரேசண்ணையே... செய்தியள் வலு சூடல்லே?" எண்டார் கனகர். "அப்பிடியெண்டா கையிலை சுடயில்லையோ?" எண்டதுக்குச் சிரிச்சினம். "எங்கடை வயித்தெரிச்சல் அங்கை மூண்டிருக்கு... வேறையொண்டுமில்லை" எண்டார் தம்பர். முருகேசர் ஆரோடையோ சத்தமாக் கதைக்கிற சத்தம் கேக்க எட்டிப்பாத்தம். மயிலண்ணையோடை கதைச்சுக்கொண்டு வந்தார்.

"முருகேசு இஞ்சை வாப்பா என்னப்பா வெளியிலை நிண்டு கதை?" எண்டு கனகர் கூப்பிட எட்டிப்பாத்து "அட எல்லாரும் இஞ்சையே இருக்கிறியள்?" எண்டுகொண்டு உள்ளை வந்திருந்துகொண்டார். மயிலண்ணையும் இருந்திட்டார். "கேள்விப்பட்டனீங்களே... பெரியவையின்ரை தேப்பன் தாயின்ரை சிலையளையும் உடைச்சுப் போட்டாங்களாம்?" எண்டார் முருகேசர்.

"அதுகள் இந்தப் பேயளைப் பெத்து வளத்ததும் குற்றமே? உது அநியாயந்தான்" எண்டார் மயிலண்ணை. "என்னண்ணை நீங்கள் சொல்லுறியள்! எங்கடையாக்களின்ரை கல்லறையளைக்கூட கிளறினவங்களுக்கு இப்ப நினைவுகளின்ரை பெறுமதி விளங்கியிருக்குமல்லே?" எண்டார் தம்பர் குரலிலை கொஞ்சம் கடுமையாய். "உவங்களுக்கு உதுகள் விளங்குமெண்டு நினைக்கிறியோ தம்பு?" எண்டார் மயிலண்ணை.

"உண்மைதான் மயிலண்ணை சொல்லுறது... பெறுமதியைப்பற்றி உவங்களுக்கென்னப்பா விளங்கும்.. அவங்களுக்கு காசும் அதிகாரமும்தான் விளங்கும்... இல்லையெண்டால் காசும் சோத்துப்பாசலும் குடுத்து அப்பாவியளையும் அடிதடிக்காறர் ஆக்கியிருப்பங்களே?" எண்டார் முருகேசர். "ஓஓஓ... பிடிபட்ட ஆக்கள், எல்லாத்தையும் ஒப்புவிச்சுப் போட்டாங்களல்லே?" எண்டார் கனகர். "பெடியள் வலு விண்ணனுகள், வலு கவனமாய் எல்லாத்தையும் செய்திருக்கிறாங்கள்" எண்டார் தம்பர்.

"நாங்கள் உதுக்குள்ளை தலைப்போடாதது எவ்வளவு நல்லதாப் போச்சுது?" எண்டார் முருகேசர். "அதுக்குத் தம்பர் நாங்கள் உதிலை சம்மந்தப்படாதது நல்லதெண்டிறியளோ? ஏனண்ணை?" எண்டு கேட்டார். "இப்ப அதுக்குள்ளை பூந்து குழப்ப வெளிக்கிட்ட வையல்லே... நாட்டைப்பிரிக்க நிண்டவையைக் கலைச்சு நாட்டைக் காப்பாற்றிப் போட்டம் எண்டு கதை கட்டி நம்ப வைச்சிருப்பங்கள்... பெடியளின்ரை போராட்ட நியாயத்தை திசை மாத்தியிருப்பாங்கள்" எண்டு நான்சொல்ல தலையாட்டிச்சினம்.

"அதுக்குள்ளை எங்கடை அப்புக்காத்து அந்தரம் கதைச்சிருக்கு.." எண்டு முருகேசர் சொல்லி நிப்பாட்டிப்போட்ட பிறகு "அதுகும் பாவப்பட்ட சீவனல்லே சம்மந்தகுடி அடிபடுகுது எண்ட வெப்பியாரத்திலை கதைச்சிருக்கும்..." எண்டு முடிச்சார். "விசாரிக்கட்டாமோ? தமிழனைக் கொண்டதுக்கு உப்பிடி சொல்லத்தெரியேல்லை... காணாமலாக்கப்பட்டதுகளின்ரை சொந்தங்களின்ரை பிரச்சினையை விசாரிக்கச் சொல்லி கேக்கத் தெரியாததல்லே உது.." எண்டு கோவமாச் சொன்னார் மயிலண்ணை.

"அது சரியண்ணை இப்ப ஒளிச்சு ஓடிவந்த பெரிசு எங்கடை நாட்டுக்கையாமல்லே... உண்மையாமோ?" எண்டார் தம்பர். "திருகோணமலையிலைதானே எங்கடை கம்பசுக்குத் தெரிவான பெடியளை சுட்டவங்கள்? ரோசங்கெட்டவன் இப்ப அதுக்குள்ளைதான் உயிருக்குப்பயந்து பதுங்கியிருக்கிறான்..." எண்டு கொதிச்சார் மயிலண்ணை. "அதுக்கை பாத்தியளோ அமைச்சர்மாரின்ரை வீடுகளை உடைக்க உடைக்க வெளிக்கிடகிற சாமானுகள்..?" எண்டார் கனகர்.

"எடப்பா உது அமைச்சர்மாரின்ரை பதுக்கல்தான்... அப்பிடியெண்டால் பெரியவையிட்டை எவ்வளவு வெளிக்கிடுமோ" எண்டார் கனகர். "அம்பதாயிரம் ரூவாய்க் கிளியளும் லட்சம் ரூவாயிலை பூனையளும் நாயளும்தான் வெளிக்கிடும்... மிச்சமெல்லாம் வெளிநாட்டு வங்கியளிலையல்லே" எண்டு சிரிச்சார் முருகேசர். 4ஓமண்ணை பெரியவற்ரை பெடியின்ரை மூண்டு லட்சத்துப் பூனை துலைஞ்சுபோச்செண்டு லொக்டவுணுக்கை தேடித்திரிஞ்சவையல்லே" எண்டார் தம்பர்.

"என்னவெண்டாலும் நாங்கள் அறிஞ்ச விசயங்களை இப்ப அவையும் அறியினமல்லே? நடக்கட்டும் நல்லா நடக்கட்டும் நாங்கள் இப்ப பாத்து ரசிப்பம்..." வரட்டே எண்டுகொண்டு எழும்பி வீட்டை வந்திட்டன்.



இந்த வார சமையல்

# வாழைப்பழ அல்வா



கச்சான் அல்வா கேள்விப்பட்டிருக்கிறோம் அதென்ன வாழைப்பழ அல்வா...? ஆம் நம்மவர்க்குப் புதிய சுவையுணவுதான் இந்த வாழைப்பழ அல்வா. வாழைப்பழம் பழக்கப்பட்டது - பழையது என்றாலும் வாழைப்பழத்தில் செய்யப்படுகின்ற இந்த அல்வா நமக்குப் புதிதே. ஊர்கள் தோறும் இலகுவில் கிடைத்துவிடக்கூடிய வாழைப் பழம் மற்றைய பழங்களைவிட மலிவாகவும் கிடைப்பதால் இந்த வாழைப் பழ அல்வாவைச் செய்வது நமக்குச் சுலபமாக இருக்கும். அந்தவகையில் இம்முறை வாழைப்பழ அல்வாவை எப்படிச் செய்வது என்று பார்ப்போம்.

**தேவையான பொருள்கள்**

கதலி வாழைப்பழம் - ஒன்றரைக்கிலோ, சர்க்கரை - கால் கிலோ, பிளம்ஸ் - 50 கிராம், கஜூ - 50 கிராம், ஏலக்காய் - 6, நெய் - காப்போத்தல்.

**எப்படிச் செய்வது...?**

கதலி வாழைப் பழங்களைத் தோலுரித்து அரைப்பானில் நன்றாக அரைத்துக் கொள்ளவேண்டும். சொர சொரப்பில்லாமல் நீர்ப் பாணி போன்ற பதத்தில் அரைத்ததும் சர்க்கரையைச் சேர்த்து அரைக்க வேண்டும். சர்க்கரையும் வாழைப் பழமும் சேர்ந்த கலவை நீர்ப் பாணி போல மென்மையான பதத்தில் இருக்க வேண்டும். பின்னர் சட்டி ஒன்றை அடுப்பில் வைத்து அதில் சிறிதளவு நெய் விட்டு நெய் நன்கு சூடாகியதும் கஜூ, பிளம்ஸ், ஏலக்காய் இட்டு அவை சூடாகியதும் வாழைப்பழக் கலவையைக் கொட்டிக் கிளறிக்கொண்டிருக்க வேண்டும். நீண்டநேரம் கிளறவேண்டியிருப்பதால் அடிப்பிடிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அடிப்பிடிக்கும் சந்தர்ப்பங்களில் நெய் சிறிதளவு விட்டுக் கிளற வேண்டும். நிறம் மாறி வரும்போது வாழைப்பழக் கலவை சட்டியில் ஒட்டாது தனியே மிதக்கும் தன்மைக்கு வரும். அப்போது இறக்கித் தட்டு ஒன்றில் பரப்பித் துண்டுகளாக்கிவிடவேண்டும். ஆறியதும் சுவையை அனுபவிக்கலாம்.



# வான் படைப் புலனாய்வும் லேசர்த் தாக்குதலும்

கமலநாதன்

ஹேமந்த குமார. இவர் இலங்கை வான் படையைச் சேர்ந்த புலனாய்வுத் துறைப் பணிப்பாளராகக் கடமையாற்றியவர். 1998 தை மாதத்தில் வான் படையில் சேர்ந்த இவர் லேசர்த் தொழில்நுட்பத்தின் மூலம் புலிகளின் இலக்குகளை தாக்குவதில் தேர்ந்தவர்.. 2019 செப்ரெம்பர் மாதத்தில் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். தனது அனுபவங்களை அவர் வெனயூரியூப் தளத்தில் பகர்ந்தார்.

நான் வான்படையில் சேர்ந்து எனது நாட்டுக்காகப் போராட வேண்டும் என்று நினைத்தபோதும் நான் குள்ளமான உடற்தோற்றம் உள்ளவனாக இருந்ததால் அது சாத்தியப்படாது என்று நினைத்தேன். நான் வான் படைக்குச் சேர்வதற்குச் சென்றபோது 5 அடி 2அங்குல உயரம் வரையிலேயே தெரிவு செய்யப்படும் என்றார்கள். நான் அந்த உயரத்தைக் கொண்டிருந்ததால் படையில் சேர்ந்தேன். தியத்தலாவ பயிற்சி முகாமில் பயிற்சியை முடித்து இண்டரை வருடங்கள் மொரவேவ வான் படை முகாமில் பணியாற்றினேன். பின்னர் ரத்மலானை வான் படை முகாமுக்கு மாற்றப்பட்டேன். அங்கு கணினி கற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அதன் பின்னர் சேர்ச்சர் மார்க் - 2 வானூர்தியின் உதவியுடன் இலக்குகளை அவதானித்து அறிக்கை வழங்கும் பிரிவில் பணியாற்றினேன்.



**பாலங்களை அடையாளப்படுத்தியமை**

எனக்கு இந்தத் தொழில்நுட்பத்தின் மூலம் கண்காணிக்கும் பணி ஏ -9 வீதியில் முதலில் வழங்கப்பட்டது. அதன்படி ஓமந்தை முதல் புளியங்குளம், மாங்குளம், முகமாலை வரையுள்ள பாலங்களின் வகைகள் பற்றிய தகவல்களைப் பெற்றுத் தருமாறு கூறப்பட்டது. அந்தப் பகுதியில் 18 பெரிய பாலங்களையும் 38 சிறிய பாலங்களையும் 142 போக்குகளையும் அடையாளப்படுத்தினேன். அதேவேளை இறுதிப் போர்க்காலத்தில் 542 இலக்குகளை நான் தெரிவு செய்து கொடுத்தேன். அதில் 8 இலக்குகள் மிகவும் முக்கியமானவை.



இந்த இலக்குகள் லேசர்த் தொழில்நுட்பத்தின் மூலம் அதிநவீன கமராக்களைக் கொண்டு அடையாளப்படுத்தினேன். ஜெட் லைனர் கப்பல் செல்லும்போது அதற்கு மேலாகப் பறந்து புலிகள் எங்காவது மறைந்திருந்து தாக்க முயல்கிறார்களா என்பதையும் கவனித்தேன்.

ஒரு தடவை ஜெட் லைனர் கப்பல் பயணித்துக் கொண்டிருந்தபோது கடற்புலிகளின் கண்போட் ஒன்றை அவதானித்தேன். அதில் நான்கு இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்தன. அதேவேளை வானூர்தி எதிர்ப்புத் துப்பாக்கியும் பொருத்தப்பட்டிருந்தது. உடனடியாக மிக், கிபிர் வானூர்திகளை அழைத்துத் தாக்குதல் நடத்தியபோது லேசர் தொழில்நுட்பத்தின் மூலம் அந்த இலக்கைத் துல்லியமாக அறிந்து நான் இருந்த சிறிய வானூர்தியிலிருந்து லேசர் மூலம் இலக்கைப் பிடித்தபோது வானூர்திக் குண்டுகளில் பொருத்தப்பட்டிருந்த லேசர் மென்பொருள் மூலம் குண்டை உரிய இடத்துக்குத் திசை திருப்ப முடிந்தது.

இன்னோர் பெரிய கப்பலைத் துணியால் மூடி நந்திக்கடல் பகுதியில் புலிகள் மறைத்து வைத்திருந்தனர். எமது உயர் தொழில்நுட்பத்தின் மூலம் அடையாளம் கண்டு தாக்கினோம். எமது லேசர் தொழில்நுட்ப வழிகாட்டுதல் மூலம் 55ஆம், 57ஆம், 58ஆம், 59ஆம் படைப்பிரிவுகளுக்கும் சி.எவ்.2,3,8 பிரிவுகளுக்கும் அதிகம் உதவ முடிந்தது.

படையினரைத் தாக்கி அழிக்கும் முறய்சியில் புலிகள் இறங்குவதை அவதானிப்பதன் மூலம் அவர்களை இலகுவாக அடையாளம் கண்டு அழிக்க முடிந்தது. இது நேரடியாகக் களத்தில் நின்ற படையினரைக் காப்பாற்றுவதற்கு அனுகூலமாக அமைந்தது. அந்த வகையில் எனது பங்களிப்பை நினைத்துத் திருப்தியடைகிறேன். இந்த லேசர் அதியுயர் தொழில்நுட்ப வசதி புலிகளுக்கு மிகவும் சிக்கலாக அமைந்தது. இத்தகைய பல இலக்குகளை முகமாலைப் பகுதியிலும் அடையாளப்படுத்திக் கிபிர் வானூர்தி மூலம் தாக்குதல் நடத்தினோம்.

**அதிசக்தி வாய்ந்த கமெராக்கள்**

அதி சக்திவாய்ந்த கமெராக்கள் பொருத்தப்பட்ட வானூர்தியில் இருவர் பயணிக்க முடியும். அந்தக் கமெராக்களில் ஒன்று பகலிலும் மற்றையது இரவிலும் துல்லியமாகப் படம் பிடிக்க வல்லவை. புலிகள் ஆயுதத்தைப் பயன்படுத்திச் சுட்டபின் அந்த ஆயுதத்திலிருக்கும் வெப்பத்தை வைத்து அந்த இடத்தைத் துல்லியமாகக் கண்டறிய முடியும். இந்த லேசர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 17 ஆயிரம் அடி உயரத்திலிருந்து தாக்குதலை நெறிப்படுத்த முடியும். ஆனால் அசையும் பொருட்களுக்கும், தண்ணீரில் உள்ள பொருள்களுக்கும் இலக்கு வைக்க முடியாது.

> **புலிகள் ஆயுதத்தைப் பயன்படுத்திச் சுட்டபின் அந்த ஆயுதத்திலிருக்கும் வெப்பத்தை வைத்து அந்த இடத்தைத் துல்லியமாகக் கண்டறிய முடியும். இந்த லேசர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 17 ஆயிரம் அடி உயரத்திலிருந்து தாக்குதலை நெறிப்படுத்த முடியும். ஆனால் அசையும் பொருள்களுக்கும், தண்ணீரில் உள்ள பொருள்களுக்கும் இலக்கு வைக்க முடியாது.**

ஒருநாள் இரவு இரணைப்பாலைச் சந்தியில் புலிகளின் நகர்வு ஒன்றை அவதானித்தேன். அவர்கள் மரங்களுக்குக் கீழே நின்றதால் (நாம் மேலே நிற்கிறோம் என அறிந்து) துல்லியமாக இலக்கு வைக்க முடியவில்லை. எனினும் கிபிர் வானூர்தியை அழைத்து லேசர் கமராவை அசையவிடாது நிலைப்படுத்தி லேசர் வலயம் ஒன்றை அமைத்து ஆயிரம் கிலோ பாரமான குண்டுகளை அந்த இலக்குக்கு அடித்து அழித்தோம்.

இரணைமடுப்பகுதியில் படையினரைப் புலிகள் சுற்றிவளைத்திருந்ததால் நாங்கள் வானில் நின்று மார்க் - 2, புளூ கொரைசன் வானூர்திகள் மூலம் அவதானித்துக்கொண்டிருந்தால் அந்த நேரத்தில் படையினர் குளிப்பதற்கு, உணவு உண்பதற்கு அவகாசம் இருக்கும். நாம் மேலே நிற்கும்போது புலிகளின் தாக்குதல்கள், நகர்வுகள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். புலிகளின் அரைவாசி நடவடிக்கைகளை இவ்வாறு மட்டுப்படுத்தினோம்.

(தொடரும்)

நட்சத்திரா

# ஏன்...? அப்படி...?

18



## நீர், நிலம், ஆகாய வணக்கம்

சிவன் - விஷ்னுவை, புத்தரை இயேசுவை, அல்லாவை இன்னுமுள்ள மதங்களின் கடவுளர்கள் என்று கருதப்படுபவர்களை வணங்குவதற்கு முன்னர் நீரையும், நிலத்தையும் (மண்), ஆகாயத்திலுள்ள சூரிய, சந்திரனையும் வணங்கும் முறையே பூர்வீக மக்கள் மத்தியில் இருந்தது. பின்னர் கிராமியத் தெய்வ வழிபாடாகியது.

எகிப்தின் நைல் நதிக்கரை நாகரீகத்தில் நீர் அவர்களின் ஜீவனாக இருந்தது. பிரேசிலின் அமேசன், இந்தியாவின் சிந்து நதி ஆகியனவற்றிலும் நிலமை அவ்வாறே. நீர் வழிபாடும் நீரைப் பாதுகாக்கும் பொருட்டு காவற்கற்கள், நாகக் கற்கள், கலசக் கற்கள் ஆகியவற்றை அமைத்த வரலாறும் பல தேசங்களில் உண்டு. நீரின் உதவியுடன் நிலத்தைப் பண்படுத்திப் பயிர் விளைவித்து வாழ்க்கை நடத்தியதால் நீரும், நிலமும் காலநிலை வழியாக வாழ்க்கைக்கு வரமளித்த சூரிய, சந்திரர்களுமே நாகரீகங்கள் மலர்ந்த காலத்து மக்களின் தொடக்கக் கடவுளர்களாக இருந்தனர். எகிப்து, கிரேக்கம் ஆகிய பல பழந்தேசங்களில் சூரியனையும், சந்திரனையுமே கடவுளர்களாக வழிபட்டனர். காற்றை, கடலை, நீரை, சூரிய - சந்திரரைக் கடவுளாக வழிபாடியற்றிய முறையே மிகப் பழங்காலத்தில் இருந்தது. ஆகமொத்தத்தில் இயற்கையை வழிபட்டனர். ஆனால் பிற்பட்ட காலங்களில் இயற்கைக்கு மாறாக மனிதர்களும் (இயேசு, புத்தர், அல்லாஹ்) கற்பனைகளும் (சிவன் -விஷ்ணு) வழிபாட்டுக்குக் கொண்டுவரப்பட்டன. மனிதர்களின் கண்ணுக்குத் தெரிந்த இயற்கையே அவர்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாக இன்றுவரை இருக்கிறது. நீர், நிலம், சூரிய - சந்திரர் என அது பலவாக இருக்கத் தாம் உருவாக்கிய கதாபாத்திரக் கடவுளர்களின் ஓர் அங்கமாகப் பிற்காலங்களில் இயற்கையை மாற்றிய தந்திரத்தை மனிதர்கள் செய்தார்கள். முதன்மையாக வழிபட வேண்டிய இயற்கையை இரண்டாம் அங்கமாக்கித் தாம் உருவாக்கிய கடவுளர்களைத் தந்திரமாக முன்னிலைப்படுத்தினர். ஐம்பெரும் பூதங்கள் என்றார்கள் (இந்துக்கள் - நீர், நிலம், காற்று, ஆகாயம், தீ) பிறையின் தேய்வைக் கொண்டாடினார்கள் (முஸ்லிம்கள்) சூரியனின் மாற்றங்களைக் குறிப்பிட்டுக் கொண்டாடினர் (இந்துக்கள், பௌத்தர்கள்) இவ்வாறாக கண்ணுக்குத் தெரிந்த, அறிவுக்கு எட்டிய - தமது உயிர் வாழ்க்கைக்கு ஆதாரப் பொருளாக இருக்கின்ற இயற்கை எனும் பெரும் கடவுளைத் தாம் உருவாக்கிய கடவுளர்களின் பின்னணியில் கொண்டாடுகிறார்கள். அந்த முறையே இப்போதும் இருக்கிறது. அனைத்து மதக் கடவுளர்களின் பின்னணியிலும்இயற்கை விரவியிருப்பதைக் காணமுடியும். எது எவ்வாறிருப்பினும் இயற்கையே நம் கண்கண்ட தெய்வம். அதை ஏதோ ஒரு விதத்தில் வழிபடுகிறோம் என்பதே நம் அனைவரது வழிபாடுகளுக்கும் பின்னாலுள்ள உண்மை. அனைத்து மதங்களின் வழிபாடுகள், கொண்டாட்டங்களையொட்டி இயற்கை தவறாமல் இடம்பெறுவதன் குறியீட்டு அர்த்தமும் இதுவே. ஏன் அப்படி இயற்கையைத் தமது தெய்வங்களுடன் வரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதன் அர்த்தம் இதுவே. இயற்கையே கடவுள்.

# வன்முறை: பழக்கப்படுத்தும் தமிழ்த் திரையுலகு




இந்து

இயக்குநர் அருண் மாதேஸ்வரனின் முதல் படமான ‘ராக்கி’ கடந்த மார்கழி மாதம் திரையரங்கில் வெளியானது. கொடூரமான கொலைகளும் குருதி சிதறும் காட்சிகளும் நிரம்பியிருந்த அந்தப் படத்தை ‘வன்முறையின் அழகிய’லைக் காண்பித்த அரிதான தமிழ்ப் படம் என்று விமர்சகர்கள் பலர் கொண்டாடினார்கள். அருண் மாதேஸ்வரனின் தனித்துவம் மிக்க காட்சிமொழி, கதைகூறல் முறை ஆகியவற்றுக்காகவும் அந்தப் படம் பாராட்டப்பட்டது.

அவர் எழுதி, இயக்கியிருக்கும் இரண்டாவது படமான ‘சாணிக் காயிதம்’, வைகாசி 6 அன்று அமேசான் பிரைம் ஓ.டி.டி.யில் நேரடியாக வெளியானது. தனித்துவமான காட்சிமொழி, புதுமையான கதைகூறல் ஆகியவற்றுடன் முதுகுத் தண்டைச் சில்லிட வைக்கும் வன் முறையை எந்தத் தயக்கமுமின்றிக் காட்சிப்படுத்தி யிருக்கிறது ‘சாணிக் காயிதம்’. ஆதிக்க சாதி வெறியர்களின் அட்டூழியத்தால் தம் வாழ்க்கைத் துணையையும் குழந்தையையும் இழந்த பொன் னியும் (கீர்த்தி சுரேஷ்) அவளுடைய அண்ணன் சங்கையாவும் (செல்வராகவன்) தமக்குத் தீங் கிழைத்தவர்களைப் பழிவாங்குவதுதான் படத்தின் கதை.


சரமாரியாக வெட்டுவது, கத்தியால் குத்துவது, துப்பாக்கியால் சுடுவது, கயிற்றால் கட்டிப்போட்டு அமிலத்தை நிதானமாக ஊற்றுவது, தீயிட்டுக் கொளுத்துவது, எதிரில் ஆயுதமேந்தித் தாக்க வரும் பெரும் கூட்டத்தின் மீது வாகனத்தால் மோதிப் பலரைக் கொல்வது என வன்முறையின் கொடூர வடிவங்கள் பலவற்றை அவர்கள் நிகழ்த்துகிறார்கள். இவற்றில் பலவும் அப்பட்டமாக கேமராவின் வழியாக நம் பார்வைக்கும் கடத்தப்படுகின்றன. வன்முறை, குறிப்பால் உணர்த்தப்படும் காட்சிகளிலும்கூட அந்தச் செயலின் உள்ளார்ந்த கொடூரம் முகத்தில் அறைகிறது. கதைப்படி இவர்களின் வன்முறைச் செயல்களுக்கு அடிப்படையாக விளங்கும் கோபம் நியாயமானது என்று அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில்தான் படம் இருக்கிறது. ஆனால், இவ்வளவு விரிவாகக் காட்சிப்படுத்தப்படும் வன்முறைக்குக் கதை அளவில் ஒரு நியாயத்தை வழங்கியிருப்பது, ‘சாணிக் காயிதம்’ படத்தைப் பிற வன்முறைப் படங்களை விட ஆபத்தானதாக்குகிறது.

ஒருவர் நமக்கு எத்தகைய கொடுமையை இழைத்தாரோ அதையே அவருக்குத் திரும்பத் தருவது சரியானது என்னும் பொருள் தரும் வசனத்தைப் பேசுகிறார் பொன்னி. பழிவாங்குவதற்காக உணர்ச்சி வேகத்தில் ஒரு குற்றச் செயலைச் செய்வதும், அதற்கு இப்படி ஒரு விளக்கத்தை யோசித்து எழுதுவதும் ஒன்றல்ல. ‘கண்ணுக்குக் கண் என்ற கணக்கில் அனைவரும் பழிவாங்கப் புறப்பட்டால் இந்த உலகமே குருடாகிவிடும்’ என்னும் காந்தியின் பொன்மொழி என்றைக்கும் பொருத்தமானது.

உண்மையில் எத்தகைய கொடுமைக்குள்ளானவர்களும் அதற்குப் பழிதீர்ப்பதற்காகக் கொலைகளையோ பிற வன்முறைத் தாக்குதல்களையோ நிகழ்த்திவிட்டால், அவர்களின் கோபத்தில் இருக்கும் நியாயம் சட்டத்தின் பிடியிலிருந்து அவர்களை விடுவித்துவிடப்போவதில்லை. தண்டனையின் அளவு வேண்டுமானால் குறைக்கப்படலாம். உண்மையில் ஒருவர் உணர்ச்சிவயப்பட்ட நிலையில், நிதானமிழந்து வன்முறையை நாடுவதை நியாயப்படுத்த முடியாவிட்டாலும் புரிந்துகொள்ளலாம். ஆனால், பழிவாங்கலுக்கு நியாயம் கற்பிக்கும் சிந்தனைகள் பொறுப்புமிக்க படைப்பாளிகளுக்கு எழாது.

‘சாணிக் காயிதம்’ என்னும் ஒற்றைப் படத்துடனோ அருண் மாதேஸ்வரன் என்னும் ஒற்றை இயக்குநருடனோ இந்தப் பிரச்சினை முடிவடைந்துவிடவில்லை. கறுப்பு - வெள்ளைத் திரைப்படங்களின் காலத்திலிருந்தே தமிழ்த் திரைப்படங்களில் சண்டைக் காட்சிகள் இடம்பெற்றாலும் 1990களிலிருந்து அவற்றில் இடம்பெறும் வன்முறை பல மடங்கு அதிகரித்தது. குறிப்பாக, நட்சத்திர நடிகர்களின் பல படங்களில் மிகை நாயகத் தன்மையை வழங்குவதற்கு சண்டைக் காட்சிகளில் வன்முறை பெருகத் தொடங்கியது. விதவிதமாக, புதிதுபுதிதாக ஒருவரை ஆயுதங்களைக் கொண்டோ வெறும் கைகளாலோ தாக்குவது எப்படி என்று யோசித்து, அவற்றைச் செயல்படுத்துவதே சினிமா ஸ்டண்ட் மாஸ்டர்களின் முக்கியப் பணியானது. ஸ்டண்ட் காட்சிகளின்போது உயிரிழந்த, படுகாயமடைந்து முடங்கிய ஸ்டண்ட் நடிகர்கள் பலர்.

மிகப் பெரும் பொருட்செலவில் குழந்தைகள் உட்பட அனைவரும் பார்த்தே ஆக வேண்டும் என்பதுபோல் விளம்பரப்படுத்தப்படும் நட்சத்திர நடிகர்களின் படங்களிலும் மிகக் கொடூரமான வன்முறைக் காட்சிகள் சர்வசாதாரணமாக இடம்பெறுகின்றன. ஷங்கர் இயக்கிய ‘அந்நியன்’, ‘ஐ’ திரைப்படங்களில் கொதிக்கும் எண்ணெயில் தூக்கி வீசுவது, லட்சக்கணக்கான பூச்சிகளை ஏவிக் கடிக்க விடுவது உள்ளிட்ட மிகக் கொடிய வழிமுறைகளில் தீயவர்களை நாயகன் தண்டிப்பார். சிறுவர்களுக்குப் பிடித்த நட்சத்திர நடிகராகக் கருதப்படும் விஜய் நடிப்பில் வெளியான ‘பீஸ்ட்’ திரைப்படத்தில் நாயகன், பயங்கரவாதி ஒருவனின் தலையை வெட்ட, அந்தத் தலை கண்ணாடியை உடைத்துக் கொண்டு வெளியே வந்து விழும் காட்சி இடம்பெற்றிருந்தது. இந்தப் படத்தைப் பார்ப்பதற்குத் தங்கள் குழந்தைகளை அழைத்துச்சென்றவர்கள் ஏராளம். அஜித்தின் ‘வலிமை’ திரைப்படத்தில் ‘கொல்லும் அதிகாரம் நமக்கு இல்லை’ என்று நம்பும் காவல்துறை அதிகாரி என்றாலும் குற்றவாளிகளின் கை, கால் எலும்புகளை உடைக்கிறார். இவ்வளவு வன்முறையைக் கொண்ட திரைப்படங்கள் அனைத்து வயதினரும் பார்க்கத்தக்க ‘யு’ தணிக்கைச் சான்றிதழுடனோ பெற்றோரின் துணையுடன் சிறார்களும் பார்க்கத்தக்கது என்பதற்கான ‘யு/ஏ’ சான்றிதழுடனோ வெளியாவது திரைப்படத் தணிக்கை முறையில் நிலவும் ஆழமான பிரச்சினைகளை அடிக்கோடிடுகின்றது.




மறுபுறம் யதார்த்தப் படம் எடுக்கிறேன் என்று கிளம்பிய இயக்குநர்களின் திரைப்படங்களில் இன்னும் அப்பட்டமான, கொடூரமான வன்முறைக் காட்சிகள் இடம்பெற்றன. இயக்குநர் பாலாவின் திரைப்படங்களில் கயவர்களை அழித்தொழிப்பவர்கள் கதாநாயகர்களும் நாயகிகளுமே. ‘நந்தா’, ‘பிதாமகன்’, ‘நான் கடவுள்’, ‘அவன் இவன்’, ‘தாரை தப்பட்டை’ என அவருடைய பெரும்பாலான படங்களின் இறுதியில் நாயகன் ஒற்றை ஆளாக மிகக் கொடூரமான முறையில் யாரையேனும் கொல்வார். வேறு பல இயக்குநர்களின் திரைப்படங்களிலும் யதார்த்தம் என்னும் பெயரில் இது போன்ற வன்முறைக் காட்சிகள் திணிக்கப்படுகின்றன. மிஷ்கின், வெற்றிமாறன் போன்ற சமகாலத்தின் முக்கியமான இயக்குநர்களின் சில திரைப்படங்களிலும் வன்முறைக்குப் பஞ்சமிருப்பதில்லை. பா.இரஞ்சித், மாரி செல்வராஜ் போன்ற இயக்குநர்களின் சில திரைப்படங்கள் சாதிக் கொடுமைக்கு எதிராக வன்முறைக் குணம் கொண்ட நாயகர்களை முன்வைப்பதாக விமர்சனங்களை எதிர்கொண்டன.

வன்முறையின் அழகியல் என்னும் அடைமொழியுடன் ‘ராக்கி’, ‘சாணிக் காயிதம்’ போன்ற திரைப்படங்களைத் தமிழில் பலர் கொண்டாடுகிறார்கள். க்வெண்டின் டாரண்டினோ, கிம் கி டுக் உள்ளிட்ட இயக்குநர்களெல்லாம் இப்படி எடுக்கவில்லையா என்ற கேள்வியும் முன்வைக்கப்படுகிறது. நாளுக்கு நாள் வன்முறைகள் பெருகிக் கொண்டிருக்கும் காலத்தில், இளம் தலைமுறையினர் அதனால் ஈர்க்கப்படும் வழிகள் அதிகமாகியிருக்கும் காலத்தில், வன்முறையை யார் கொண்டாடினாலும் அது தவறே. திரையில் தோன்றும் நாயகர்களைப் பார்த்து புகைப்பழக்கத்தையும் மதுப்பழக்கத்தையும் பின்தொடர்பவர்கள் அதிகம். வன்முறைக்கும் இதே போன்ற தீய விளைவுகள் உள்ளன. ஏற்கனவே ஈழத்தில் திரைப்படங்களைப் பார்த்துத்தான் இளைஞர்கள் வாள்வெட்டுக் கலாசாரத்திற்குள் மூழ்கிக் கிடக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டு இருக்கின்றபோது, இதுபோன்ற திரைப்படங்கள் எத்தகைய வன்முறையையும் இயல்பானதாக ஏற்றுக்கொள்ள நம் மனங்களைப் பழக்குகின்றன.

அன்றாடம் பலவகையான வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கும் சமூகத்தில் உருவாகும் படைப்புகளில் முற்றிலும் வன்முறையைத் தவிர்க்க முடியாது. ஆனால், வன்முறையைக் கதையின் உள்ளடக்கமாகவும் காட்சிகளாகவும் உருவாக்கும்போது, அவை சமூகத்தில் எத்தகைய தாக்கத்தைச் செலுத்தும் என்பதையும் சிந்தித்துச் செயல்பட வேண்டும் என்பதே படைப்பாளிகள் கவனத்தில் கொள்ளவேண்டியது.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.05.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781